
# சுதந்திரப்பறவைகள்



# சுதந்திரப் பறவை - பறவை - 6

## உள்ளே - - - - - - - - - -


1. இனங்காண்போம்.
2. சிறையிலே ஒரு சிறையடைப்பு.
3. பற்சுகாதாரம்.
4. அளவுகோலை மாற்றுங்கள்.
5. இன்று மக்களின் நிலை, இன்று போராளிகளின் நிலை.
6. கல்வியே கண்.
7. மாணவர் நினைத்தால் - - - - -
8. ஈழ தினசரிப்பத்திரிகையிலிருந்து - - - - - - -
9. காலம் ஒருநாள் மாறும்.
10. முடிந்ததைச் சொல்கிறோம்.
11. இந்திய இலங்கை உறவு ஒரு கண்ணோட்டம்.
12. சந்தித்தோம், உரையாடினோம், எழுதுகிறோம்.
13. பாட்டியை சந்திப்போம்.
14. தலை வணங்குகிறோம்.
15. வேஷங்கள் கலைக்கப்பட்டால்.
16. செய்திக்கோவை.

தமிழ் பேசும் மக்கள்
எங்கள் சுதந்திரம் இங்கு
கூலிப்படையின் துணைகொண்டு
பறிக்கப்படுகிறது; மறுக்கப்படுகின்றது.
சுதந்திர சூரியனின் ஒளிச்சிதறல்
சிங்கள அரச பெருங்கையால்
திரைபோட்டிழுத்து மறைக்கப்படுகிறது.
பலரும் சேர்ந்து பாடுபட்டு
குத்திக் கிழித்துப் பிய்த்துத்
திரையது பொட்டுப் பொட்டாய்க்
கிழிந்து சிதறிட தெரிந்த சொட்டுச்
சுதந்திர ஒளிக்கீற்றும்
எம்முள் சிலரால்
இன்னொரு திரையிட்டு மறைக்கப்பட
அன்னியர் உதவி நாடப்படும் வேளை
எம் மவராலும் எதிர்த்தே ஆகவேண்டிய
கடமை என்றும் எமக்கு உண்டு
மக்கள் நாம் அணிதிரண்டால்
மயக்கம் ஏன்? குழப்பம் ஏன்?
விடுதலையின் மேல் இன்னும்?
விடுதலை எம் கையில்
விளங்கிக் கொள்வோம்.
நம்பிக்கை எம் நெஞ்சில்
நாமே பெறுவோம்
எம் நாட்டின் விடுதலையை.

# இனங் காண்போம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை திசை திருப்ப முயலும் எந்த தீய சக்திகளையும் இனங்கண்டு தூக்கி எறிய வேண்டிய கடமை விடுதலை ஸ்தாபனங்களுக்கு மட்டுமல்லாமல் தமிழீழ மக்கள் அனைவருக்குமே உரியது. அதனை விளங்கிக் கொண்டு தம்மையும் போராட்டத்தில் இணைத்துக்கொள்ள மக்கள் அனைவரும் முன்வரும் போதுதான் எங்கள் விடுதலைப் போராட்டம் மேலும் முன்னெடுக்கப்படும்.

எத்தனையோ போராளிகளின் உயிர்த் தியாகங்களெல்லாம் அர்த்தமற்றதாகி விடக்கூடாதென்றால் அது எமது மக்களின் கைகளில் தான் உள்ளது. விடுதலை ஸ்தாபனங்களை நிராகரித்து மக்களாலும் மக்களை அலட்சியம் செய்து, விடுதலை ஸ்தாபனங்களாலும் எத்துணைப் பாடுபட்டாலும் விடுதலைப்போராட்டத்தை வென்றெடுக்க முடியாது.

தமிழீழம் அமைப்பதற்காக தங்கள் சுக வாழ்வைத் துறந்து வந்தவர்களில் விடுதலைப் போராளிகளாக உருவாக்கப்பட்டவர்கள் மட்டுமல்லாமல் வேலையாட்களாக, அடிமைகளாக கொள்ளையர்களாக, கொலைஞர்களாக உருவாக்கப்பட்டவர்களும் உள்ளார்கள். அப்படி அவர்களின் போராட்ட உணர்வை திசை திருப்பி வளர்த்த எவர்களையும் மன்னிக்க மக்கள் தயாராக இருக்கக் கூடாது. அப்படி வளர்த்தவர்களை இனம் கண்டு தண்டிக்க மக்கள் ஒன்றிணைந்து முன்வருவதோடு நிற்காமல் விடுதலைப் போராட்டத்தில் தம்மையும் இணைத்துக்கொள்ள வேண்டும். "நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என்ற கொள்கையை இவ்விடயத்தில் எவரும் கடைப்பிடிக்க வேண்டும்.

சமதர்மத் தமிழீழம் அமைக்க ஆவலுற்று தம்மை விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக்கொண்டு தம் உயிரைத் தியாகம் செய்த எங்கள் விடுதலைப் போராளிகளின் மரணம் அர்த்தமில்லாததாகி விடக்கூடாது என்பதில் அக்கறையுள்ள எந்த ஒரு தமிழீழப் பிரஜையும் சமதர்மத் தமிழீழம் அமைப்பதற்கான போராட்டத்திற்கு இடைஞ்சலாக யார் வந்தாலும் அவர்களைக் கண்டறிந்து எதிர்க்கவும் நிராகரிக்கவும் முன்வந்தால் தான் எமது சகல பிரச்சினைகளுக்கான தீர்வுக்கான காலம் விரைவில் வரும். எமது இலட்சியம் நிறைவேறும்.

எங்கள் போராட்டம் தனியே தமிழீழம் காண்பதற்கானது மட்டும் அல்ல. பேதமில்லாத சமதர்மம் நிலவுகின்ற தமிழீழத்தை அமைப்பதற்கானதே. அதனால் சாதியின் பெயராலோ மதத்தின் பெயராலோ, பணத்தினாலோ, இன்னும் எந்த எந்த ஒடுக்குமுறைக் கருவிகளின் பெயராலோ அடக்கி ஒடுக்க நினைப்பவர்களை இனம் கண்டு எதிர்க்கவும் நிராகரிக்கவும் முயலவேண்டும். சகல ஒடுக்குமுறைக்கெதிராக போராட முன்வருபவர்கள் சில ஒடுக்குமுறை வடிவங்களை தாங்களும் கைக்கொள்வார்களென்றால் அவர்களும் கண்டறியப்பட்டு தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டியவர்களே. ஒடுக்கு முறைக்குட்பட்ட எல்லோரும் ஒன்றிணைந்து போராடினால் தான் போராட்டம் வெற்றி பெறும். பார்வையாளர் பலராகவும் பங்காளிகள் சிலராகவும் உள்ள நிலை விரைவில் மாறவேண்டும்.

ஆதரவு தரவேண்டியவர்கள் அனைத்து ஆதரவு தருவதோடு நிற்காமல் எங்கள் இடத்துள் வந்து தாம் வெற்றிபெற்றுத் தருவதாகச் சொல்லி எம் விடுதலைப் போராட்டத்தை அர்த்தமற்றதாக்கி விடுதல் எப்படி வரவேற்க முடியாதோ அவ்வாறே பங்களிப்புச் செய்ய வேண்டியவர்கள் பார்வையாளர்களாக நின்று கொண்டு வீணன விவாதங்கள் தேவையற்ற விமர்சனங்களில் ஈடுபடுவதும் வரவேற்க முடியாததாகும். எவரும் போராட்டத்தில் பங்களித்துக் கொண்டு விமர்சனம் செய்தால் அதனைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு தம் தவறுகளைத் திருத்திக் கொள்ள எல்லா விடுதலை அமைப்புகளும் முன்வர வேண்டும். பங்களிப்போர் செய்யும் விமர்சனங்கள், ஆலோசனைகள் மட்டுமே எவராலும் ஏற்றுக் கொள்ளப்

படவேண்டியவை. எட்ட நின்று கொண்டு விமர்சனம் என்ற பெயரில் வீண் விவாதங்களை வளர்த்து குழப்பம் விளைவித்துக் கொண்டிருப்போர் கருத்துக்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவேண்டிய அவசியமே இல்லை. ஆனால் அப்படியான குழப்பவாதிகளையும் திருத்தி எம்மோடு போராட்டத்தில் இணைந்துக் கொள்ள முயலவேண்டும். விடுதலை அமைப்புக்கள் தான் மக்களுக்கு அரசியல் தெளிவை ஏற்படுத்த முயலவேண்டும் என்பதில்லை எமது நாட்டின் உண்மையான விடுதலையை நேசிக்கும் எவரும் எவருக்கும் அரசியல் தெளிவை ஏற்படுத்தும் விதத்தில் தங்களாலான பணிகளைச் செய்யலாம்.

## நம்புவோம்

எங்களில் வைப்போம்
நம்பிக்கையை
அதனால் அடைவோம்
விடுதலையை
ஆதரவை வேண்டுவோம்
எவரிடமும்
ஆனால் அடிமைச்சாசனம்
எழுதியே கொடுத்திட
ஒருபோதும் சம்மதியோம்.

**விமர்சிப்போம் நாங்கள்**
**வெளியில் பார்வையாளர்களாக**
**நின்றுகொண்டு**
**இல்லை இல்லை**
**உள்ளே பங்காளிகளாக**
**இணைந்து கொண்டு.**

# சிறையிலே ஒரு சிறையுடைப்பு

வீடு ஓய்ந்துபோய் இருக்கிறது. அந்த நிசப்தத்தைக் கலைத்துக்கொண்டு மெல்லிய குரலில் அம்மா விசும்பி அழும் ஒலி கேட்டுக் கொண்டுதான் இருக்கிறது. தனக்குள் சிரித்துக் கொள்கிருள் வாணி. பாவம் அம்மா சுயமாக சிந்திக்கத் தெரியாமலோ அல்லது தனைகளை மீறப் பயந்து கொண்டோ இருந்தவளுக்கு தான் கதைத்தது எதிர்த்து வாய் காட்டுவதாகத்தான் பட்டிருக்கும்.

அரை மணித்தியாலத்திற்கு முன் நடந்து முடிந்த அந்த நாடகத்தை நினைத்துப் பார்க்கிருள் வாணி.

சைக்கிளை உருட்டியபடியே கேற்றைத் திறந்தவளை வரவேற்றது 'மகாராணி ஊர் சுத்திப்போட்டு வாரு' என் அண்ணுவின் கோபம் கலந்த கிண்டல் குரல். அதைக் காதில் விழுத்தாமல் மௌனமாக படியேறுகிறவளை தொடர்கிறது அவரின் குரல்.

"வெளியில இருந்து ஊருக்கு நான் வந்து ரெண்டு நாளாகேல்லை ஊருக்கை தலைகாட்டேலாமைக் கிடக்கு. பெண்ணையோ வளர்க்கிறியள் என்றல்லோ கேட்கிருர்கள். ஊருக்கை இருக்கிறவங்கள்" என்றவரை நோக்கி கோபத்தோடு

"பெண் என்ருள் என்ன ஆடு, மாடு மாதிரி அடிமை விலங்கோ? அவளுக்கு உணர்ச்சிகள் சுதந்திரம் கிடையாது என்றுதான் இன்னமும் நினைச்சுக் கொண்டிருக்கிறியளோ? உங்களை---"

அவளின் வார்த்தைகளை இடைமறிக்கின்றது அண்ணுவின் ஆணவக்குரல்.

"கனக்கக் கதைச்சியெண்டால் பல்லெல்லாம் சிதறிப்போயிடும். எண்டைக்கும் நீங்கள் வீட்டில இருக்கிற ஆம்பிளையளுக்கு அடங்கித்தான் இருக்க வேணும்"

என்ற அண்ணுவை சாந்தமாக இடைமறிக்கிருள் வாணி.

"ஏன் அண்ணு! அக்காவை அடக்க ஒடுக்கமாகத்தானே வளர்த்தனியள். நல்லவன் குணமான பெடியன் எண்டு ஒருத்தனுக்கு தாரை வார்த்துக் குடுத்தியள் எப்பவாவது அக்கா அதிர்ந்து கதைச்சிருப்பாவோ அல்லது குடும்பக் கடமையிலிருந்து தவறியிருப்பாவோ. இப்ப என்ன நடந்தது? அந்தக் குணமான பெடியன் அக்காவை விட்டிட்டு, மேல்நாட்டில அரைகுறை ஆடை கட்டினதுகளுக்கும் பின்னுல திரியுது அக்கா மனைவிக்குரிய சமத்துவத்தை உரிமையோடு பெற்று நடந்திருந்தால் இப்படி நடந்திருக்குமோ? நீங்கள் சமத்துவம் தரவு மாட்டியள். நியாயம் காட்டி கேட்கிறவையளையும் விடவும் மாட்டியள் இப்படித்தான் பெரும்பாலான ஆண்கள் இருக்கினம். கதைச்சால் தங்கடை பொட்டுக் கேடுகள்வெளிச்சிடும் என்று கதைக்கவும் தடை உத்தரவு".

வாணி வார்தைகளை முடிக்குமுன் கையை ஓங்கியபடி விரைந்து வருகிருர் அண்ணு

'நிற்பாட்டுங்கோ அண்ணு, அடிக்கிறதால இப்ப இந்தக் கதையை நிறுத்தலாம். ஆணு பெண்கள் விடுதலைக்கான உணர்ச்சிகளை தடை போட்டு நிறுத்தேலாது" திகைத்து நின்றவர்

"எக்கேடோ கெட்டுப் போங்கோ உன்னை வளர்த்த வளர்ப்பும் பிழை. நீ கெடுகிறதும் காணுதெண்டு ஏன் சுமதியின்ர வாழ்க்கையையும் இடைக்க இழுக்கிருய் நீ அவளைப் பற்றிக் கதைக்காதை. நான் வலு' கெதியில திரும்பவும் போடுவன். நீ எக்கே டும் கெட்டு குட்டிச் சுவராப் போ"

பேசியபடியே கோபமாக வெளியேறுகிருர் அண்ணு.

"அய்யோ பிள்ளை இந்தப் பிரச்சினையான நேரத்தில நாங்கள் செத்தாலும் அவன்தான் கையால கொள்ளி வாங்கிக்கொண்டுபோறதுக் கெண்டு இருக்கிறம். கொண்ணையைக் கோவிக்கச் செய்து போடாதை" பதறியபடி ஓடிவந்தாள் அம்மா.

"நீங்கள் சும்மா இருங்கோ அம்மா. நாங்கள் அவைன்ர உரிமையைப் பறிக்கவில்லையே. எங்கட உரிமையைத்தானே கேட்கிறம்" என்றவள் தொடர்ந்து உங்கட அம்மா தன்ர உரிமையைக் கேட்டிருந்தால் உங்களுடைய சந்ததி தற்கொலையோ, மனவெறுப்புகளோ இல்லாமல் சந்தோஷமாக வாழ்ந்திருக்கும். சரி நீங்கள் கேட்டிருந்தால் இப்ப நாங்கள் உங்களை இப்படிக் கேட்டிருக்க வேண்டிய தேவையே வந்திராது. இப்படி வீட்டுக்கு வீடு தாய்மார் ஆம்பிளைப்பிள்ளையள் என்று பிரிவினை காட்டித்தான் அவைன்ர ஆதிக்கம் கொடிகட்டிப் பறக்குது. நன்மைதான் வருது என்றால் யாருடைய ஆதிக்கத்துக்குள்ளேயும் சுதந்திரமாக வாழலாம். ஆனா இந்த ஆணாதிக்கத்தினால் பெண்களுடைய முன்னேற்றமல்லோ பாதிக்கப்படுகிறது. இப்ப சொல்லுறன் சுமதி அக்கான்ரை வாழ்க்கை பயனில்லாமல் போனதுக்குஉங்களைப் போல ஒரு தாய் வளர்த்த ஆணைவிட அவள் வளர்த்த ஆணாதிக்கம்தான் காரணம். இப்படி ஒரு பெண்ணின்ர வாழ்க்கையை உங்கடை மகன்மூலம் பாழாக்காதையுங்கோ.

இந்த நேரிடையான பதிலால் அடிபட்ட அம்மா கண்களில் கண்ணீர் திரையுடன் பின் வாங்குகிறாள். அதுதான் இன்னமும் விசும்பலாக ஒலித்துக்கொண்டிருக்கிறது.

சுயமான சிந்தனைகளை தெளிவில்லா நோக்கோடு பார்த்திருப்பின் நானும் இந்த அடிமைத்தளையிலதான் சிக்கியிருக்க வேணும். இப்பவும் அடிமைத் தளையில தான் இருக்கிறன் ஆனால் பெண் விடுதலையைப்பற்றி கதைக்கக் கூடிய அளவிற்கு அந்தத் தளைகளை தளர்த்தி வைத்திருக்கிறேம் என்று நினைத்த வாணி பழைய ஞாபகத்தை நினைவு கூர்ந்தாள்.

"வாணி கெதியா இங்கால வா"

அப்பாவின் சத்தத்தால் வீடே அதிர்ந்தது, என்ன நடந்தது என்று புரியாத தவிப்பில் சேலைத் தலைப்பில் ஈரக்கையை துடைத்தவாறு விரைந்து வருகிறாள் அம்மா, அந்த நடையிலேயே ஒரு பயம் தென்படுகிறது.

"உன்னை என்னத்துக்கு பள்ளிக்கூடம் விட்டனாங்கள்? ஒழுங்காப் படிச்சு ஒழுங்காச் சீவிக்கவோ அல்லது ஊரைத் திருத்திறம் எண்டு வேலை வெட்டி இல்லாமல் திரியிறதுகளோட சேர்ந்து அதுமாதிரித் திரியவோ?

"என்னப்பா! என்ன நடந்தது? சொல்லிப் போட்டுக் கேளுங்கோவன்" மெதுவாகக் கேட்கிறாள் அம்மா.

"பொத்தடி வாயை. நீ வளர்த்த வளர்ப்பு இப்ப ஊரெல்லாம் சிரிக்குது, அவங்கள் கூட்டம் வைக்கிறாங்களாம். இவ சந்தேகம் கேட்கிறவாம். பக்கத்துவீட்டுத் தறுமன் சொல்லியல்லோ தெரியும்."

நாட்டின் தற்போதைய நிலையையும் அதனை நாம் சமாளிக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் பற்றி விளக்கம் தந்தவர்கள் உங்கள் சந்தேகங்களை கேட்கலாம் என்றார்கள். பரீட்சைகள் இடையில் குழம்பப்படுவதால் தமிழ் மாணவர்களிற்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றி கேட்ட கேள்வி தான் விசாரணையில் வந்து நிற்கிறது என்று நினைத்தாள் வாணி.

"ஒழுங்கா இருக்கிறதென்றால் பள்ளிக்கூடம் போ இல்லையோ நிற்பாட்டிப்போடுவன்" என்றதோடு அப்பா நிறுத்திக் கொண்டார்.

தனியாக உட்கார்ந்து சிந்தித்தவளுக்கு அம்மாவின் வெருண்ட முகமும் நடுங்கிய குரலும்தான் ஞாபகத்திற்கு வந்தன.

"ஓம்! நாங்கள் நாட்டுக்காக மட்டுமல்லாமல் வீட்டில் பேச்சிழந்து பதுமைகளாக இருக்கும் பெண்களுக்காகவும் போராட வேண்டும்.

இதன் பின்தான் வீட்டுக்குத் தெரியாமலே சில சேவைகள் செய்து பின்னர் தெரியவே செய்யத் தொடங்கிவிட்டாள்.

இதனை அறிந்த அப்பாவின் முன் மீண்டும் விசாரணைக்காக நிற்கையில் அதற்கான விளக்கத்தைக் கொடுத்தது மட்டுமல்லாமல் சில புத்தகங்களையும் வாசிக்க கொடுத்தாள். அதன் பின் அப்பாவின் கெடுபிடிகள் குறைந்து விட்டன என்றுதான் சொல்ல வேண்டும். நியாயபூர்வமாக அதை ஏற்றுக் கொண்டதாலோ என்னவோ மறைமுகமான உதவிகளைக்கூட பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

ஆனால் இந்த அண்ணதான் ...............
இருவரும் சமூகம் மாறும்போது நிச்சயம் மாறத் தான் போகிறார்.

"என்ன வாணி எந்தக் கோட்டையைப் பிடிக்க யோசனை"

அக்கா கேட்டவாறே வருகிறாள்.

"ஓமக்கா பெண்களின்ர சுதந்திரத்தை அடைச்சு வைச்ச கோட்டையை உடைக்கத் தான். அதுசரி எங்க போட்டு வாறியள். கோயிலுக்கோ?"

"அப்பிடிச் சொல்லிப்போட்டு அகதியள் புனர்வாழ்வுக் கழகத்திற்குப் போய் என்னால் ஏலக்கூடிய உதவியளைச் செய்து குடுத் திட்டு வாறன். என்னை இந்தளவுக்குச் சி திக்க வைத்தது உன்னேட பேச்சுத்தான்.

சமதியக்காவை சந்தோசத்தோடு கட்டிக் கொள்கிறாள் வாணி.

சிலநாட்கள் கழிந்தன.

ஒருநாள் காலை வெளியே சென்ற அண்ண விழுந்தடித்துக் கொண்டு ஓடிவருகிறார். என்ன தம்பி? என்ன நடந்தது? வினவிய அம்மாவை மௌனமாக ஏறிட்டவாறு எதையோ தீவிரமாக யோசிக்கிறார். "அம்மா பக்கத்து ஊரில ஆமிக்காரங்கள் தேடுதல் என்று பெண்களை மானபங்கப்படுத்துறாங்கள் எண்டு கதைக்கி னம்" என்றவர் பின்னர் என்ன முடிவிற்கு வந்தவர் போல பெண்கள் எதிர்த்துப் போரா டவும் நாங்கள் ஏதும் பயிற்சி குடுத்திருக்க வேணும்" என்று சொன்னவரை இடைமறிக் கிறாள் வாணி. இப்ப விளங்கிக் கொள் ளுங்கோ. பெண்கள் ஆகாயத்தில் பறக்க சிற குகள் கேட்கவில்லை. தரையில் நடக்கத்தான் கால்களை கேட்கினம். பெண்களின் சுதந்தி ரத்தை ஆண்கள் பாதிக்காமல் இருந்திருந் தால் அவையள் தங்கடை பொது எதிரியான ஆமிக்காரனுக்கு எதிராக ஆவேசமாக போராடி யிருப்பினம். இதுக்கு பயிற்சி தேவையில்லை. தாய்நாட்டு மீட்சியிற்கான உந்துவிசையே, ஒரு பெரிய பயிற்சியாக இருந்திருக்கும். இப்ப அவையள் தாங்கள் இருக்கிற சிறையை உடைத்து வந்துதான் போராட வேண்டி இருக்கிறது.

ஆனா பெண்களுக்கும் சம அந்தஸ்த்து கொடுக்கும் காலம் நிச்சயம் வரும். அதுக்கு சமூகம் மாற்றமடைய வேணும். சமூகம் தானாத் திருந்தாது. அதை மாற்றமடைய வைக்கவேணும் என்றவளை

"ஓம் திருத்தத்தான் வேணும் ஆனா கஸ் ரம்" என்று ஆமோதிக்கிறார் அம்மா.

"பெண்களுக்கு விடிவு வரவேணும் எண் டால் கஷ்டப்பட்டுத்தான் ஆக வேணும் அம்மா" என்றார் அண்ணா.

இப்போது சமூகப் பாதை சீர்திருத்தப் பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. இன்னும் அதிலுள்ள எத்தனையோ பள்ளங்கள் நிரப்பப் படத்தான் வேண்டும்.

## எமக்குள் ஏக்கம்

*பாதயாத்திரை செய்து அன்று*
*விடுதலை தேடிய வீர புருஷர்களின்*
*வரிசையில் எம் பெயர்ப்பட்டியலும்*
*பதியப்பட வேண்டும்.*

*ஏனெனில் எம்வயிற்றுத் தேச*
*விடுதலைக்கு காலைமுதல் மாலைவரை*
*இந்தப் பாதயாத்திரையைத் தான்*
*நாம் செய்து கொண்டிருக்கிறோம்.*

# பற் சுகாதாரம்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழிக்கிணங்க ஆரோக்கியமான வாழ்வே நாம் பெறும் செல்வங்களில் சிறந்த செல்வம். எனவே சிறந்த சுகாதார வாழ்க்கை முறையே நம்மை ஆரோக்கியமான வாழ்வுக்கு இட்டுச் செல்லும் நாம் உண்ணும் உணவிலும் அணியும் உடையிலும் அருந்தும் நீரிலும் எவ்வளவு தூய்மையையும் சுத்தத்தையும் எதிர்பார்க்கின்றோமோ அவ்வளவுக்கு நமது வாய்க்குழியை மறந்து விடுகின்றோம். வாய்க்குழி என்றவுடன் எவரது மனதிலும் பற்கள், நாக்கு போன்ற உறுப்புகள் தோன்றும். இந்த உறுப்புகளின் சுகாதாரம் மிக மிக முக்கியமானவை. பற்களுக்கிடையிலும் நாக்கின் மேற்பரப்புகளிலும் உணவுத்துணிக்கைகளும் கிருமிகளும் தங்கியிருக்குமாயின் அவைகள் நாம் உண்ணும் உணவுடன் சேர்ந்து நம் உடல் நலத்தைப் பாதிக்கும்.

நம்மிடையே பலருக்கு பல்லின் முக்கியத்துவம் நன்றாகப் புரிந்தாலும் எத்தனையோ பாமர மக்களின் நன்மை கருதி சில முக்கியத்துவங்களை கீழே தருகின்றோம்.

(1) நாம் கடினமான உணவுவகைகளை அரைத்து உண்ணவேண்டுமாயின் பற்கள் தேவை.

(2) நாம் அழகாக இருப்பதற்கும், சிரிப்பதற்கும் பற்கள் தேவை

(3) நாம் கதைக்கும் பொழுது. சொற்களை சிறந்த முறையில் உச்சரிப்பதற்கும் பற்கள் தேவை.

நாம் மேற்குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் பற்களின் கட்டமைப்பையும், வாய்க்குழியில் அவை அமைக்கப் பட்டிருக்கும் முறையையும் விளங்கிக் கொள்வது நன்று.

பற்களை தலை (Crown), வேர் (Root) என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். தலைப்பகுதி (crown); மிளிரி (Enamel) பன்முதல் (Dentine) மச்சை (Pulp) என்ற மூன்று பகுதிகளைக் கொண்டது.

மிளிரி கடினமான பொருட்களை அரைத்து உண்பதற்கு உதவுகின்றது. உயிரற்றது. ஆகவே உயிர்த்தன்மையுடைய பன்முதல், மச்சை என்பன சேதமடைவதை தடுக்கின்றது.

வேர்ப்பகுதியானது மேல்தாடை என்பிலும், கீழ்த்தாடை என்பிலும் அமிழ்ந்து நன்றாக இணைக்கப்பட்டு இருக்கும் அத்துடன் முரசினால் மூடப்பட்டு பற்களின் தொழிற்பாட்டுக்கும் உதவுகின்றது.

மூன்று வகையான பற்கள் காணப்படுகின்றன.

(1)வெட்டும்பல் (2)வேட்டைப்பல்(3)கடைவாய்ப்பல்.

வெட்டும் பற்கள் வெட்டுவதற்கும், வேட்டைப்பற்கள் கிழிப்பதற்கும், கடைவாய்ப்பற்கள் உணவை அரைப்பதற்கும் உதவுகின்றன.

பற்சுகாதாரத்தில் பல்லும், பற்களைத் தாங்கும் தாடைகளும், முரசும் முக்கியமானவை. இவை நம்முடைய கவனயீனம் காரணமாக பாதிக்கப்பட்டு சேதமடைகின்றன. இவைகளில் ஏற்படும் நோய்கள் தடுக்கப்படவும் குணமாக்கப்படவும் கூடியவை.

### பற்சொத்தை (caries)

பற்களில் ஏற்படும் நோய்களில் ஒன்று பற்சொத்தை ஆகும். இது சாதாரணமாக பல்லின் தலையில் அல்லது பற்களுக்கிடையில் கறுப்பு அல்லது பளுப்பு நிறமான புள்ளியாகக் காணப்படும். அத்துடன் குளிர்நீர் குடிக்கும்போது கூச்சம் அல்லது நோவு உண்டாகும். இந்நிலையில் பல் வைத்தியரை அணுகி வைத்தியம் பெற வேண்டும். பல் வைத்தி

யரைக்கா ண த் த வ றி ன் பற்சொ த்தை பெரி தாகி பல் பிடுங்கும் நிலை ஏற்படும்.

கூ டு த லா க இனிப்பு வகைள் உண்ப தால் பற்சொத்தை உண்டாகும். அதாவது சொக்லேட், சீனி, தேநீர், பிஸ்கட் போன்ற உணவுப் பொருட்களைக் குறிப்பிடலாம். அத்துடன் இவைகளைப் பாவிப்பதைக் குறைத்துப் பாவித்தபின் வாயை நன்ருக துப்பரவு செய்தால் பற்சொத்தை வருவதைக் குறைக்கலாம்.

சி று வ ய தி ல் (1-3வயது) போத்தலில் பால் கொடுத்தபின் வாயை நன்ருக நீரிஞல் கொப்பளிக்க செய்யவும். இதஞல் இவர்களை இந்நோயிலிருந்து தப்ப வைக்கலாம்.

**(2) பற்சுற்றிழைய நோய்:-**

இந்நோய் ஏற்படும்போது ஆரம்பத்தில் முரசு நோவும், முரசு வீக்கமும் காணப்படும் இந்நிலையில் பல் வைத்தியரை அணுகி ஆலோசனை பெறவேண்டும். நாம் ஆரம்பத்தில் கவனயீனமாக இருப்போமாஞல் முரசுகள் வழியாக இரத்தம் கசியும், முரசு கரையும், பற்களைச் சுற்றி சீழ்பிடிக்கும், பற்கள் ஆடத்தொடங்கும், நோவற்றிருக்கும் வாயில் துர்நாற்றம் வீசும்.

**பற்சுற்றிழைய நோய்க் காரணிகள்:-**

(1) பற்களுக்கும் முரசிற்கும் இடையில் உணவு படிவதால் அதில் கிருமிகள் தொழிற்பட்டு முரசைக் கரைக்கின்றன (Plaque & Calculus) அதாவது ஒழுங்காக பற்கள் சுத்தமாக்கப்படாமை.

(2) பற்கள் நெருக்கமாகவும் ஒழுங்கீனமாகவும் இருந்தால் உணவு பற்களுக்கிடையில் இலகுவாகப் படியும்.

(3) செயற்கைப் பற்களை சுத்தமில்லாமலும் ஒழுங்கில்லாமலும் அணிதல். அதாவது சாப்பிட்டபின் இப்பற்களை சுத்தமாக்காமல் அணிதல்.

(4) ஒழுங்கற்ற முறையில் பற்தூரிகை (Brush) பாவித்தல்

எங்கள் நாட்டைப் பொறுத்தவரையில் பற்சுற்றிழைய நோயிஞல் பற்கள் கூடுதலாக இழக்கப்படுகின்றன. ஆகவே பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

(1) வாயின் துர்நாற்றத்தை அகற்றி பற்களை பற்தூரிகை கொண்டு காலையிலும் மாலையிலும் துலக்க வேண்டும், பற்தூரிகையை கிடையாக பிடித்து மேல்தாடைப் பற்களுக்கு மேலிருந்து கீழாகவும் கீழ்தாடைப் பற்களுக்கு கீழிருந்து மேலாகவும் பற்தூரிகையை அசைத்து துலக்குவதால் பற்களை சுத்தப்படுத்த வேண்டும்.

(2) ஒவ்வொரு சாப்பாட்டின் பின்னும் வாயை நன்ருக தண்ணீரிஞல் சுத்தம் செய்யவேண்டும். பற்தூரிகையிஞல் ஒவ்வொரு சாப்பாட்டின் பின்னும் சுத்தம் செய்தல் கூடிய பயனைத் தரும்.

(3) பற்களுக்கிடையில் உ ண வு சி க் கி க் கொண்டால் அவற்றை மரப்பற்குச்சியிஞல் சுத்தமாக்க வேண்டும்.

(4) விரல்களிஞல் பல்சுத்தம் செய்வதையும் பற்பொடி, கரி, மணல் போன்றவைகள் பாவிப்பதையும் முற்ருக தவிர்க்க வேண்டும்.

(5) அத்தியாவசிய தேவையின் போதும் ஆறுமாதத்திற்கு ஒருமுறையேனும் பல் வைத்தியரிடம் பற்களைக்காட்டி அறிவுரை பெறவேண்டும்.

**(3) பாரம்பரிய நோய்கள்:**
(Amelogenesis Imperfecta, Dentinogenesis Imperfecta)

பற்களின் விருத்தியின் மாற்றம் ஏற்படுவதால் பல்லின் கட்டமைப்பு மாறுபடுகின்றது. இதில் பற்கள் மஞ்சள் நிறமாகவும் சிலவேளை வெள்ளைப் புள்ளிகளும் சிலவேளை பல்மிளிரி பன்முதல் என்பவையும் உடைந்து காணப்படும்.

**(4) உணவுகளிஞலும் மருந்துகளிஞலும் ஏற்படும் நோய்கள்:-**

கருவுற்றிருக்கும் தாய்க்கும், சிறுவயதில் பல்முளைக்கும் வயதிலுள்ள சிறுவர்களுக்கும் சில மருந்துவகைகள் கொடுத்தால் பற்கள் பழுப்பு நிறமாக உருவாகும். ஆகவே வைத்திய ஆலோசனையுடன் மருந்துவகைகளைப் பாவிக்க வேண்டும்.

(5) **பழக்கவழக்கங்களினால் ஏற்படும் நோய்கள்:**

( ) பற்களின் மேற்பரப்புகள் தேய்தல். இரவில் பல்நறும்புதல் போன்ற பழக்கங்களினால் இது உருவாகும்.

(b) பற்களின் வெளிப்பரப்பு தேய்தல். விரலினால் பல் துலக்குவதாலும் பற்பொடி, கரி, மணல் போன்றவை பாவிப்பதாலும் வெளிப்பரப்பு தேயும். இதனால் பல் மிளிரி தேய்வடைந்து பன்முதல் வெளிப்படுவதால் பற்சொத்தையும் கூச்சம், நோ எல்லாம் உண்டாகும். முரசு கரைதலும் உண்டாகும்.

(6) **வாய்க்குழியில் ஏற்படும் மற்றைய நோய்கள்:**

வாய்க்குழியில் சொக்கு, நாக்கு, அண்ணம் போன்ற பகுதிகளில் வெள்ளைப்படர்வு அல்லது சிவப்புப்படர்வு காணப்படின் பல் வைத்தியரை அணுகி அறிவுரை பெறவும்.

வாய்க்குழியில் நீண்டகாலமாக மாறாது காணப்படும் புண்கள் (புற்றுநோய்) ஏற்பட்டால் அல்லது மேற்குறிப்பிட்ட படர்வுகள் ஏற்பட்டால் பின்வரும் பழக்கவழக்கங்களைத் தவிர்த்தல் வேண்டும்.

(1) புகைத்தல் உ-ம்:- சுருட்டு, சிகரெட் பீடி, சுங்கான்.

(2) வெற்றிலை சாப்பிடுதல்.

(a) சுண்ணாம்பு, புகையிலையை தவிர்க்க வேண்டும்.

(b) வாய்க்குழியில் அதிகநேரம் வைத்திருப்பதை தவிர்க்க வேண்டும்.

(c) வெற்றிலை பாவித்தவுடன் வாயை நன்றாக கழுவவேண்டும்.

(d) சாப்பிடும் தடவைகளைக் குறைக்க வேண்டும்.

(3) மதுபானம் அருந்துதல்.

## உறுதியோடுழைப்போம்

அழுது வாழ
அடிமையாய் இருப்போம்
சிரித்து வாழ
சிந்துவோம் செங்குருதி
உயர்ந்து வாழ
உழைப்போம் வியர்வை சிந்தி
துயில் கொள்ள
துப்பாக்கியை அணைப்போம்
பண்பாட்டைக் காக்க
பங்காளிகளாவோம்
கற்பைக் காக்க
களத்தில் இறங்குவோம்
சுதந்திரம் பெற
சுடுகாடும் செல்வோம்
நாளைய விடிவுக்காய்
நாடுவோம் தமிழீழம்.

-விஜி-

# அளவுகோலை மாற்றுங்கள்

-நேரிழை-

பெண்கள் சமுதாயத்தில் இரண்டாம் பட்சமானவர்கள் அல்ல. அவர்களிடமும் ஆணுக்கு நிகரான ஆளுமையும் திறமையும் உண்டு. ஆனால் அவர்கள் அதனை வெளிப்படுத்தும் சந்தர்ப்பமும், உரிமையும் மட்டும் சமுதாயத்தால் மறுக்கப்பட்டு வருகிறது என்பது வரட்டுவாதிகள், விதண்டாவாதிகள் அல்லாத நேர்மை வாதிகளால் ஒத்துக்கொள்ளப்பட்ட உண்மை.

இருப்பினும் இன்றும் நமது சமுதாயத்தில் பெண்நிலைவாதம் பற்றிய உண்மைக் கருத்துடையோரை எண்ணிவிடலாம் வரட்டுவாதிகளே காய்ந்தசருகு போல் அதிகம் காணப்படுகின்றனர்; இவர்கள் பெண்களாகவும் இருக்கலாம் ஆண்களாகவும் இருக்கலாம்.

இவ்வாறு பெண்களின் நடவடிக்கையை சமுதாயமானது பழைய உழுத்துப்போன அளவுகோல் கொண்டு அளக்குமேயாயின் தேசியஇனவிடுதலையில் இன்று பெண்கள் ஆற்றும்பணி பூச்சியம் என்றே அது காட்டும். அத்தோடு தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு பங்களிக்கும் பெண்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்திக் குறைத்துச் செல்லும்.

எனவே இந்நிலை குறித்து இன்று மகளிரமைப்புக்கள் முன்னிலையில் பெரும் பணியொன்றுள்ளது- பெண்ணிலைவாதம் பற்றிய தெளிந்த கருத்தை சமுதாயத்தின் சகல மட்டங்களிலும் - இளைஞர்கள், பெரியோர்கள், தாய்மார்கள், யுவதிகள் மத்தியில் கொடுக்க வேண்டும்; பிற்போக்கு சக்திகளை எதிர்த்து விடா முயற்சியுடனும் இலட்சியப்பற்றுடனும் காரியங்களைச் சாதிக்க வேண்டும்; சமுதாயத்தில் ஆண்களுக்கு நிகரான அந்தஸ்த்தை பெண்கள் தாமாகவே முயன்று போராடிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மலரும் தமிழீழம் இனப்பிரச்சனையை மட்டும் தீர்த்துவைக்கும் தாயாக அன்றி மக்களிடத்தில் உள்ள சமூகப் பிரச்சனைகளையும் தீர்த்துவைக்கும் ஒரு சமதர்மத் தாயாக, தியாக சிந்தையுள்ள தாயாக இருப்பாள் என்று பலராலும் பேசப்படுகிறது. இருப்பினும் இது வெறும் பேச்சாகவே இல்லாமல் உண்மையாக இருக்க வேண்டுமாயின் முதலில் முற்போக்கு சக்திகள் இளைஞர் மத்தியில் பெண்ணிலைவாதம் பற்றிய முற்போக்குக் கருத்தும் சிந்தனைத்தெளிவும் ஏற்படவேண்டும். தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்ளும் பெண் போராளிகளுக்கிடையிலும் ஆண்போராளிகளுக்கிடையிலும் இதுபற்றிய கருத்து முரண்பாட்டிற்கு இடமளித்தல் கூடாது.

சோசலிஷம், சமத்துவம், சமதர்மம் சமுதாயமாற்றம் என்பது வெறும் வாய்ப்பேச்சால் வந்துவிடக் கூடியதல்ல. ஒவ்வொரு மனிதனதும் அடிப்படைச் சிந்தனையில் செயற்பாட்டில் ஒரு திருப்பம் ஏற்படுத்தப்பட வேண்டும். இந்த வகையில் குறிப்பிடக் கூடிய சில இளைஞரமைப்பும் பெண்கள் அமைப்பும் தொழிற் பயிற்சியிலும் தொழில் நுட்பக்கல்வியிலும் பெண்களுக்கு முதலிடம் கொடுத்துள்ளது வரவேற்கத்தக்கது

இருப்பினும் மகளிரமைப்புகள் பெண்ணொடுக்கு முறைக் கெதிரான போராட்டத்தைச் சரியாக நெறிப்படுத்தி பெண்கள் ஒரு அமைப்பின் கீழ் வந்தது கட்டுப்பாட்டோடும் ஒழுக்கத்தோடும் இயங்குவதாலும் ஒருமித்துக் குரலெழுப்புவதாலும், சமுதாயத்தோடு ஒன்றிணைந்து செயற்படுவதாலுமே பெண்ணொடுக்கு முறைக்கெதிரான போராட்டத்தில் வெற்றியை அணுகலாம். சமுதாயத்தின் அளவுகோலை மாற்றலாம் பூரணமதிப்பைப் பெறலாம்.

## செல்வப் புதல்விகளே சென்றிடுங்கள் களம் நோக்கி

செந்தமிழ் அன்னையின் செல்வப் புதல்விகளே
செந்தணலாய் புகைகின்ற நம கதை கேளுங்கள்
அடக்குமுறைகளை அனுமதிக்காத எம தோழர்கள்
அடிமை நாட்டில் துயில் கொள்ள மறுத்தனர்
அகிம்சை ஆயுதங்களால் நசுக்கப்பட
ஆயுதம் ஒன்றே வழி எனக்கண்டனர்
அடிமையில் ஊறிவிட்ட பைந்தமிழர் விடுதலைக்காய்
வீரம் மிக்க தியாகத்தீரர்கள் - இதயக
குருதியைச் சிந்தினர் இந்நாட்டில்
களங்களில் வீர விதைகளாய்ப் போன போராளிகள்
சிங்களத்துச் சிறைகளில் சிதைந்த தோழர்கள்
வதைகூடங்களில் வாழ்கின்ற ஜீவன்கள்
காம வெறியர்க்கு பலியாகிப்போன காரிகையர்கள்
வளர்கின்ற புரட்சியில் வழிதடுமாறிய வனிதையர்கள்
ஒதுக்கிடம் தேடி சாம்பலாய்ப்போன கன்னியர்கள்
ஈமக்கடன்களை எழுதிக்கொள் ஈழம் - என
இறந்து உரமாய் போன மக்கள்
ஓ பெண்ணே!
இத்தனைக்கும் ஆளாகிவிட்ட எம் இனம்
நாம் மட்டும் இன்னும் ஏன்
வீட்டினுள் அடிமைகளாய்
வருகிற நாட்டினில் நமக்கும் இவை
வரும்வரை காத்திராது வருமுன் அணைகட்டுவோம்
இன்றே எழுந்திடுவோம்
அடக்குமுறைகளைத் தகர்த்திடுவோம்.

-சித்திரா-

## இன்று மக்களின் நிலை

83ல் ஆடிக்கலவரத்தில்
ஆடிக்களைத்தவர்கள்
துள்ளி எழுந்து
துடுக்காய் பேசினார்கள்
எப்படி?
'ஈழத்தமிழர் நாம் எழுந்து விட்டோம்
இனவாத அரசை இல்லாதொழிப்போம்
என்று

அணியாய் இங்கு
பொடியன்கள் சேர்ந்தார்கள்
புதுக்கவே இங்கு
புதுமைகள் செய்தார்கள்
மக்கள் நன்றாய் போற்றி புகழ்ந்தார்கள்
புழுகித் தள்ளினார்கள்.

எப்படி?
சாவகச்சேரி தாக்குதலில்
சரியாக நாற்பது பேராம்
புகையிரத தாக்குதலால்
பூண்டோடு சரியாம்
கோட்டை தாக்குதலால்
கேற் கூட மிஞ்சவில்லையாம்

வீட்டுக் கதிரைக்குள்
சுகமாக இருந்து கொண்டு
மார்தட்டி நன்றாக
மானம் வீரம் பேசியவர்கள்
தனக்கு வந்ததும்
தனி நியாயம் பேசினார்கள்

பேசிறவர்கள் இன்னும்
பேச புதிதாய் வந்தது
போர் நிறுத்தமும்
பேச்சுவார்த்தையும்
புதினம் பேசினவர்கள்
புதுக்கதை சொல்கிறார்கள்
பேசாமல் உந்த மாகாண ஆட்சியை
பொடியள் வாங்கலாம் தானே என்று,

போராட்டம் பற்றி
புரிந்து கொள்ளாமல்
சட்டங்கள் பேசும்
தமிழீழ மக்களே
உரிமையை தொலைத்த நீங்கள்
உணர்வினையும் எங்கே தொலைத்துவிட்
டீர்கள்.

## இன்று போராளிகளின் நிலை:-

இன்று போராளிகளின் நிலை
வெளி வேஷக்காரர்களின்
வேஷம் கலைந்ததால்
வெளிநாட்டுக்கு இன்று
வெளிக்கிட்டு ஓடுகிறார்கள்
ஓட்டம் எத்தனை
மைல் வேகத்திலும் ஓட்டம்
ஆம்
போராட்டம் செப்பனிடப்படுகிறது
இவர்களைச் செப்பனிடுகிறது

சுயநலக்காரர்களின்
சுவடுகளின் வழியில்
சமதர்ம தமிழீழம்
சமைத்திட வேண்டாம்

அழிவன அழிந்து
சிதைவன சிதைந்து
ஓடுகிறவர்கள் ஓடி
மிஞ்சிறவர்கள் மிஞ்சுகிற போது
முன்னேற்றுவோம்
நம்நாட்டையே
முன்னேற்றுவோம்
ஏகாதிபத்தியத்திற்கு எதிராக
ஏராளமாய் போரிடுவேன் என்று
ஏற்றமிகு ஆண்மையுடன்
எழுச்சி கொண்டவர்கள்
உட்கட்சிப் போராட்டத்தை
உடைத்தெறிய முடியாமல்
உளறிக் கொட்டிக்கொண்டு
உதறுகிறார்கள் இயக்கத்தை

உதறட்டும்
ஓட்டும்
போராட்டம் என்றும்
பின் தங்கவே மாட்டாது
ஏனெனில் போராட்டக்காரர்கள் இன்றும்

இங்குதான் இருக்கிறார்கள்
போராட்டம் இன்னும்
தொடரத்தான் போகிறது

மேல்நாட்டு மோகத்தால்
வேஷங்கள் கலைந்தன
போராட்டங்களை தொடங்கிவிட்டு
பொறுப்புகளை உதறிவிட்டு
போர்த்திருந்த தோலையும்
கழற்றி எறிந்து விட்டு
புறப்படுகிறார்கள்
பிறநாடு

பாவியர்கள் போவதனால்
பரிதவிக்கும் மக்கள் இங்கு
நம்பிக்கைகள் கழன்றுவிட
நம் கைகள் உண்டு என்று
- போராடுகிறார்கள் -
போலிகள் ஒதுங்கட்டும்
போராட்டம் தொடரட்டும்
வருபவர் வரட்டும்
வரமுடியாதவர்கள் குறுக்கே நில்லாது
விலகட்டும் - இது மக்கள் குரல்-

வாழப் பிறந்த தமிழர் நாம்
வாழவேண்டும் பெருமையுடன்
கோழை போல ஓடுபவர்
கோலத்தை நாம் மறந்துவிட்டு
வாழச் சிறந்த வழிவகுப்போம்
வலிதில் முயன்று வலுப்பெறுவோம்

புடம் போட்டு எடுத்த போராளிகளால்
பொங்கி எழும்எம் போராட்டம்
வெளிநாட்டிற்கு இன்று ஓடுபவர்களால்
வெளிராது எங்கள் போராட்டம்
வீழ நாம் இங்கு தயாரில்லை
விரைந்து நாம் எழுந்திடுவோம்
ஈழத்தமிழர் நாடொரு காலம்
இங்கு மலரும் இது திண்ணம்

## கொடுமைகள் தாமாய் மறைவதில்லை

இனியும் நாமிங்கு அடிமையில்லை.
இவ்விலங்குகள் நமக்கொரு சிறையுமில்லை - வெறுங்
கூரலங் கடத்தலினல் பயனுமில்லை.
வெங் கொடுமைகள் தாமாய் மறைவதில்லை - போர்க்
கோலம் கொள்வதில் தவறு இல்லை - ஓர்
புரட்சி வராமல் இனிமையில்லை! ஒன்ருய்த்
திரண்டெழாமல் வெற்றியில்லை -நாம்
திரண்டெழுந்தால் மண்ணில் எதிரியில்லை.

ஆரபி

# கல்வியே கண்

ஏட்டினிலே கல்வி கற்க
நாட்டு நிலைமை சரியில்லை - என்று
கூறிக் கொண்டு - தினம்
நின்று நின்று பள்ளி வரும் செல்வங்களே

ஆருத்துயர் கொண்டு பெற்ற அன்னையர்
பிதற்றையிலே
மாரு வடுக்களுடன் மாண்டமாவீரர்
எத்தனைபேர்.

பேயாய் அலையும் பிணந்தின்னிகளின்
கைபட்டு
நாயாய் இறந்த குழந்தைகள் எத்தனை பேர்?
பணந் தேடச் சென்று பாடுபட்ட
கணவன்மாரை பிணமாய் கண்டோர் எத்தனை பேர்?

இருப்பினும் மாணவர்
வெருண்டெழலாகாது.
விருப்புடன் கல்வி கற்றல் வேண்டும்

வேந்தர்களாயும் வேங்கைகளாகவும்
உலகின் தலைசிறந்த வீரர்களாயும் ஆவது
கல்வி எனும் சஞ்சீவியினாலே.

ஈழத்தின் முன்னேற்றத்திற்கும் இயல்பான
எழுச்சிக்கும்
வாழத் தெரிந்தவர்கள் வழங்குவது
கல்வியே

இருப்பது இருக்கட்டும்
உயர்ச்சிக்காய்
விருப்புடன் கல்வி கற்றல் மிக
அவசியம்.

-கலா-

# மாணவர் நினைத்தால் - - - - -

-மகா-

கல்விக் கண்ணைத் திறக்க வைப்போர் நன்றாக வாழ்வார்கள் என்று கூறுவது வழக்கம். அந்த விதத்தில் கல்வி கண்ணாக உருவகிக்கப்படுகின்றதென்றால், அதன் மகத்துவம் எவருக்குமே விளங்கும். இன்று தமிழ்பேசும் மக்கள் விடயத்தில் அப்படிப்பட்ட கல்விக்கண்ணை மூடுவதற்கு பலர் போட்டி போடுகிறார்கள். சிறீலங்கா அரசு மட்டுமல்லாமல் எங்கள் இனத்தவர் சிலராலும் கல்விக்கு ஆபத்துக்கள் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன.

சிறீலங்கா அரசின் கெடுபிடிகளால் வடக்கு கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்கள் அனுபவிக்கும் இன்னல்களை எழுத்தில் வடிக்க முடியாது. கடலுக்குச் சென்று மீன்பிடிக்க முடியாமலும், சுயதொழில்களை ஒழுங்காகச் செய்ய முடியாமலும் விவசாயம் செய்ய முடியாமலும் மக்கள் அல்லல்பட்டு அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். வயல்கள் சிங்கள சிறீலங்கா இராணுவத்தால் எரிக்கப்படுகின்றன. அழிக்கப்படுகின்றன. கடலுக்குச் செல்பவர்கள் கடற்படையினரின் தாக்குதலுக்குள்ளாகின்றார்கள். இந்நிலையில் உழைத்து வாழும் மக்கள் அனைவருக்கும் பொருளாதாரக் கஷ்டங்கள் ஏற்படுகின்றன இதனால் பலபெற்றோர் தம் பிள்ளைகளைக் கல்விகற்க அனுப்புவதில்லை. தாம் எவ்வளவு தான் கஷ்டப்பட்டாலும் தம்பிள்ளைகளைப் படிப்பித்தே ஆகவேண்டும் என்று எண்ணும் பெற்றோர்தான் அதிகமாக உள்ளார்கள். ஆனால் அப்பெற்றோரும் இன்றைய சூழ்நிலையில் தம் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். இராணுவத்தினரின் தாக்குதல்களுக்கு பாடசாலைகள் இலக்காவது இன்று சர்வசாதாரணமாகிவிட்ட ஓர் விடயம்.

யாழ்ப்பாணம் தவிர்ந்த முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி இவைபோன்ற வேறும் இடங்களிலுள்ள பாடசாலைகளில் இராணுவத்தினரின் தாக்குதல்களால் பாதிப்படைந்து தம் வாழிடத்தை விட்டு வெளியேறிய மக்கள் ஆயிரம் ஆயிரமாய் தஞ்சம் என்று சென்று விட்டால் அப்பாடசாலைகள் தொடர்ந்தும் அகதிகள் முகாம்களாக இயங்கவேண்டிய நிலையே ஏற்படுகின்றது. அரச பாதுகாப்புப் படைகளின் தாக்குதல்களுக்கு அடிக்கடி இலக்காகும் கிராமங்களிலிருந்து மக்கள் வெளியேறுவதால் அங்குள்ள பாடசாலைகளுக்குச் செல்ல எந்த மாணவர்களும் இருக்கமாட்டார்கள். மேலும் தமிழீழத்திலுள்ள பல பாடசாலைகள் மினி இராணுவமுகாம்களாக மாற்றப்படுகின்றன. சில அழிக்கப்படுகின்றன.

ஹிட்லரின் ஆட்சியில் நடந்த வன்முறைகளில் கூட வைத்திய சாலையில், பாடசாலைகள் தவிர்ந்த இடங்களே தாக்குதல்களுக்குள்ளாகின. ஆனால் இங்கோ சிறீலங்கா அரச பாதுகாப்புப் படைகளின் ஷெல் தாக்குதல்களுக்கு வைத்தியசாலைகள், பாடசாலைகள் இலக்காகின்றன. பாடசாலைகள் தாக்குதலுக்குள்ளாவது சகஜமாகிவிட்டது. சிங்கள அரசானது தமிழ்பேசும் மக்களின் உடமைகள், உயிர்கள் என்றவகையில் எவற்றையெல்லாம் அழிக்க, பறிக்க இயலுமோ அதனைச் செய்து கொண்டு இருக்கும்பொழுது தமிழ்பேசும் மக்களின் கல்விச் செல்வத்தை பறிக்கும் விதத்தில் தன் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது தமிழீழத்து பாடசாலைகளை அழிப்பதன் மூலம் தமிழ்பேசும் மக்களின் கல்விச் செல்வத்தை அழித்தொழிக்கலாம் என்று திட்டமிட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறது. அதேவேளை தமிழீழம் தவிர்ந்த எனைய பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு பாதுகாப்பு வழங்குகிறது. பலத்த பாதுகாப்பு தாம் வழங்குவதாக உத்தரவாதமளித்து அங்குள்ள மாணவர்களை பாடசாலைகளுக்கு வரும்படி அழைக்கிறது.

பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்பிவிட்டு வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு வாழும் நிலைமைதான் இன்று தமிழ்பேசும் மக்களின் நிலையாகும், முதல்நாள் இரவிலோ மறுநாள் காலையிலோ குண்டுவெடிப்புச் சத்த

ங்கள் கேட்டால் பிள்ளைகளை பெற்றோர் பாட சாலைக்கு அனுப்புவதில்லை. ஒழுங்காக பாட சாலைகள் நடந்து கொண்டிருக்கும் போது வேறு விதத்தில் எம்மவர்களாலேயே அவை தடைப்படுவதும் உண்டு. ஹர்த்தால் என்ற வடிவத்தில் அத்தடை ஏற்படுகிறது. சிறீ லங்கா அரசினால் தான் கல்வி பாதிக்கப்படுகின் றதென்றால் ஹர்த்தால், பகிஸ்கரிப்பு போன் றவற்றை நடத்தும் எம்மவர்களாலேயே எமது மாணவர்களின் கல்விக்கு இந்தக்கதி ஏற்படு கின்றது. இக்காலத்தில் மாணவர் கல்வியைப் பாதிக்கும் விதத்தில் நடத்தப்படும் ஹர்த்தால் பகிஸ்கரிப்பு தேவைதானா என்பதனை அதனை நடாத்தும் அமைப்புக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மாணவர்சக்தி மா பெரும்சக்தி என்று கூறப் படுகிறது. ஆனால் அதேவேளை அச்சக்தியை பலவீனப்படுத்துவதும் அவ்வாறு சொல்பவர் களில் சிலர்தான். மாணவர் சக்தி மாணவர் சக்தியாக இருக்கும்போதுதான் மாபெரும் சக் தியாக இருக்கும் என்பதை எவராலும் மறுக் கவோ, மறைக்கவோ முடியாது. கல்வியைப் பாதிக்கும் விதங்களில் செயல்கள் புரிந்து கொண்டு மாணவர்சக்தி மாபெரும்சக்தி என்று சொல்லிக்கொள்வது வேதனைக்குரிய ஓர் விட யமாகும். படிப்பை குறையில் நிறுத்தி விட்டு ஆயுதம் ஏந்த ஆசைப்படும் மாணவர் கள் அதிகமாகிக் கொண்டே வருகிறார்கள். அவர்களின் ஆசைப்படி விடு தலை அமைப்புகளும் அவர்களைச் சேர்த்துக் கொள்கின்றன. தம் தாய்நாட்டின் விடுதலைக் காகபோராடத் தம்மை அர்ப்பணிக்கத் துடிக் கும் மாணவர்களின் விடுதலை உணர்வை அலட்சியப்படுத்த வேண்டும், அந்த உணர்வை மழுங்கடிக்க வேண்டும், என்று நாம் சொல்லவில்லை. ஆனால் கல்வியைப் பாதி யில் நிறுத்திவிட்டு வரும் மாணவர்களை தொடர்ந்து படிக்கும்படி வற்புறுத்த வேண் டியது எல்லா விடுதலை அமைப்புக்களினதும் கடமையாகும். அவ்வாறான விடுதலை உணர் வுள்ள மாணவர்களை ஒன்றுபடுத்தி மாணவர் அமைப்பாக உருவாக்குவது நல்லது. அவ்வா றான அமைப்புக்கள் சில இன்று உள்ளன.

மாணவர் ஆயுதம் ஏந்தக்கூடாது என்று நாம் சொல்லவில்லை ஆனால் கல்வியை ஆயுதம் ஏந்துவதற்காகப் கைவிடக்கூடாது என்பத னையே சொல்லவருகிறோம். மாணவன் ஒருவ னின் ஒரு கையில் துப்பாக்கியும் மறுகையில் பாடப்புத்தகமும் இருப்பதை வரவேற்கலாம். ஆனால் துப்பாக்கி மட்டுமே மாணவன் கைக ளில் இருக்குமென்றால் மலரப்போகும் தமிழீ ழத்தில் கல்வியின் நிலைகவலைக்கிடமாகத்தான் இருக்கும். சிலகாலங்களுக்கு முன் மாணவர் தம் கைகளில் துப்பாக்கிகளை மட்டுமே ஏந்த வேண்டிய நிலையே இருந்தது. ஆனால் இன்று துப்பாக்கியையும் பாடப்புத்தகத்தையும் வைத் திருக்கக்கூடிய நிலை மாணவர்களுக்கு வந்துள் ளது. அதனால் கல்வியை உதறிவிட்டு வாராமல் மாணவர்கள் போராட்டத்தில் தம் பங்களிப் பைச் செய்யலாம்.

கல்வியில் தரப்படுத்தலைத் தொடர்ந்து தான் விரைவான முன்னேற்றப்படி விடுத லைப்போராட்டத்தில் காணப்பட்டது. அவ் வாறு தமிழ்பேசும் மக்களின் கல்வியில் சிறீ லங்கா அரசு கைவைக்க ஆரம்பித்த போது வீறு கொண்டு வளரத்தொடங்கிய விடுதலைப் போராட்டம் இன்று எத்தனையோ படிகள் முன் னேறிக்கொண்டு வருகிறது, சோஷலிசத் தமி ழீழம்தன் தமது இலட்சியம் என்பதிலிருந்து அணுவளவேனும் வழுவாமல் போராடி வருகி றார்கள்! விடுதலைப் போராளிகள் எந்தக் கல் வியின் காரணமாக எமது விடுதலைப் போராட் டத்தில் ஓர் விரைவு ஏற்பட்டதோ அந்தக் கல்வியில் பாதிப்பை நாமே ஏற்படுத்துவோ மென்றால் மலரப்போகும் தமிழீழத்தில் நாம் மலர்ச்சியைக் காண்போமா?

அப்படிப்பட்ட ஓர் தமிழீழத்திற்காகவா தமது உயிர்களை அர்ப்பணித்துக் கொண்டிருக் கிறார்கள்! எமது விடுதலைப் போராளிகள். மாணவர்கள் வெறும் புத்தகப் பூச்சிகளாகவும் இருக்கவேண்டாம். அதேவேளை ஆயுதம்தான் வேண்டும் என்று அடம்பிடிக்கவும் வேண் டாம். இரண்டு நிலைகளுமே எதிர்கால தமிழீ ழத்தின் ஆரோக்கியத்திற்கு ஆபத்தான அம் சங்களாகும்.

இன்று மாணவர்கள் கல்வியைப் பாதிக் கும் விடயத்தில் போட்டிபோட்டுக் கொண்டி ருப்பவை மினி சினிமாக்கள், உள்ளூர் தொலைக்காட்சி ஒளிபரப்புக்கள், மதுபோதை

வஸ்த்துக்கள். உள்ளூர் தொலைக்காட்சி ஒளி பரப்புகள்ஓரளவு கட்டுப்படுத்தப் பட்டுள்ளன (அப்படி ஒரு நல்ல சேவையைச் செய்ததும் ஓர் மாணவர் அமைப்புத்தான்) ஆனல் மினி சினிமா தியேட்டர்கள் இன்று கண்பார்க்கு மிடமெல்லாம் தென்படுகின்றன. பெரும்பாலும் மினிசினிமா அரங்குகளில் காட்டப்படுவன ஆபாசப் படங்கள் தான். அதனை விட போராட்ட உணர்வை மழுங்கடிக்கும் படங்க ளும் காட்டப்படுகின்றன. கண்பட்ட இடமெல் லாம் மினிசினிமா அரங்குகளைக் காணும் மாண வர்களை அவர்களை அறியாமலேயே அவர்கள் கால்கள் அங்கு இழுத்துச் செல்கின்றன தொடர்ந்து அவ்வாறான ஆபாசப்படங்களை பார்க்கும் வெறி மேலோங்க பணம் அவர்க ளுக்குத் தேவைப்படுகின்றது. பணத்தைப் பெற்றுக் கொள்ள அவர்கள் களவு எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். ஆரம்பத்தில் சிறு களவாக எடுத்து நாள டைவில் கொள்ளையாக மாறுகின்றது. இயல் பாகவே கொள்ளைக் கோஷ்டிகள் உருவாகின் றன. மாணவர்கள் கொள்ளைக் கும்பல்களாா கின்ற ஆபத்துக்கள் ஏற்படலாம். மினி சினிமா பார்க்கும் மாணவன் கொள்ளைக்கார னுக மட்டும் உருவாகுவதோடு நின்றுவிடுவ தில்லை. காமவெறியனுகவும் மாற்றப்படுகின் றன். வீதிகளிலே பெண்கள் தனித்துப்போக முடியாதநிலை உருவாகும். ஓர் பக்கத்தில் தமது உயிரைக் கொடுத்து விடுதலைப் போரா ளிகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மறு புறத்திலோ மலரப்போகும் தமிழீழத்தை நாற்ற மெடுக்கும் சாக்கடையாக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். பண ஆசைபிடித்த சில பெரியமனிதர்கள் அவர்களுக்கு தேவை பணம் மட்டுமே இந்த நாடு எப்படிப்போனு லென்ன? இந்த மக்கள் எப்படி போனுலென்ன? அவர்களுக்கு அக்கறையில்லை. ஏனென்றால் இந்தப் பணத்தைக் கொண்டு அவர்கள் பிற நாடு சென்று சொகுசாக தம் வாழ்க்கையைத் தொடருவார்கள். அவர்களிடம் இருக்கவே இருக்கிறது மக்களைப் படுகுழியில் வீழ்த்திச் சேர்த்துக் கொண்டிருக்கும் பணம்.

இவர்கள் சமூக விரோதிகள் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவர்கள். மாணவர் கூட் டத்தை காடையர் கும்பலாக்கும் மாபெரும் கைங்கரியத்தைச் செய்து விடுதலைப் போராட் டத்தை முன்னேற்ற முடியாமல் தடுப்பதில் பெரும்பங்கு வகிப்பவர்களில் இக் கூட்டத் தாரும் அடங்குவார்கள். இவர்களை மிஞ்சி விடுவார்கள் போதை வஸ்த்து ஏஜெண்டுகள். சிறீலங்கா இராணுவத்தை விட மோசமான பணியைச் செய்பவர்கள் இவர்கள். எந்த ஒரு தமிழ்பேசும் மனிதனையும் சுட்டோ, வெட் டியோ தன் கடமையைச் செவ்வனே ஆற்றி விடுகிறது சிறீலங்கா இராணுவம். ஆனல் இவர்களோ விடுதலைப் போராட்டத்தை மழுங் கடிக்கும் நோக்கத்துடன் களவாக விநியோ கிக்கும் போதைவஸ்த்துக்களால் தமிழ்பேசும் மக்கள் சமுதாயத்தை சுயநினைவற்றவர்களாக ஆக்க முயன்று கொண்டிருக்கிறார்கள். பண மோகத்தால் தமது இனத்தையே அழித்தொ ழிக்க முனையும் கயவர் கூட்டமான போதை வஸ்த்து விற்பனையாளர்களை இனம்கண்டு மக் கள் முன் நிறுத்த மாணவ சமுதாயம் முன்வர வேண்டும். ஏனென்றால் இன்று பெருமளவில் இப்போதை வஸ்த்துகளின் மயக்கத்தில் மூழ்கி இருப்பவர்கள் மாணவர்களே.

மாணவர் நினைத்தால் சாதிக்கமுடியாதது என்று எதுவுமில்லை என்பதை சரியாகப்புரிந்து கொண்டு சிறீலங்கா அரசு திட்டமிட்டு தமிழ் பேசும் மாணவர்களின் கல்வியைப் பாதிக்கும் விதத்தில் தான் நடவடிக்கைகளை அமைத்துக் கொள்கிறது. அதனைவிட மிகவும் மோசமாக தமிழ்பேசும் எம் இனத்தவரில் சிலரே மாணவ சக்தியைப் பலவீனப்படுத்த பல செயல்களைப் புரிந்து வருகிறார்கள். மினிசினிமா, போதை வஸ்த்து என்று இப்படி பலகாரணிகளால மாணவரின் போராட்ட உணர்வை மழுங் கடிக்க முனைகிறார்கள். இவர்கள் போன் றோரை இனம்கண்டு அவர்களுக்கெதிராகப் போராடி மாணவசக்தி மாபெரும் சக்தி தான் என்பதை எல்லோருக்கும் உணர்த்த வேண்டியது மாணவர்களின் முக்கிய கட மையாகும். ஆயுதம் ஏந்திப் போராடவேண்டி யது எத்துணை முக்கியமானதோ (அத்துணை முக்கியமானதோ) அத்துணை முக்கியமானது இவ்வாறான விடுதலைப் போராட்டத்தை பின் தள்ள முனையும் தீயசக்திகளை இனங்கண்டு எதிர்ப்பதும், அழிப்பதுமாகும்.

ஆதலால் மாணவர்களே! எல்லோரும் ஒன் றிணைந்து போராடிப் பெறத்துடிக்கும் சமதர்ம

தமிழீழம் பெயரளவில் அல்லாமல் உண்மை வேண்டுமென்றால் அதற்கு உங்கள் பங்களிப்பு யிலேயே சமதர்ம தமிழீழமாகத்தான் இருக்க மிக மிக அத்தியாவசியமாகும்.

## ஈழநாட்டிலிருந்து:-

*6-1-86* திங்கள்

ஆசிரியரை விடுவிக்குமாறு பிரஜைகள் குழு கோரிக்கை.

*21-2-86* வெள்ளிக்கிழமை

உடுப்பிட்டி பாடசாலைகளில் பாடப்புத்தகங்களின்றி மாணவர் பாதிப்பு.

*11-3-86*

வவுனியா மாவட்டத்திலுள்ள பறயனாலங்குளத்தில் புதிய இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

*15-3-86* சனி

வல்வை மக்கள் 2000பேர் வீடுகளில் தஞ்சம்.

*19-3-86* புதன்

மயிலிட்டிப் பகுதியில் 3000 மாணவர்கள் பாடசாலை செல்லவில்லை. மயிலிட்டி தையிட்டி, ஊறணி, பலாலிப் பகுதியிலுள்ள பாடசாலைகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன.

*1-4-86* செவ்வாய்

பரீட்சை எழுதிக்கொண்டிருந்த மாணவர்கள் மத்தியில் திடீரெனப் புகுந்த ஆயுதப்படையினர் சோதனை நடத்தியதால் மாணவர்களின் பரீட்சை குழம்பிப் போனதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுக்காலை 10மணியளவில் பூநகரி மகாவித்தியாலயத்துக்கு இச்சோதனை ஏற்பட்டது.

*5-4-86* சனி

மாணவன் கைது. பாடசாலை வெறிச்சோடியது.

பூநகரி மகாவித்தியாலய க.பொ.த(உ.த)மாணவன் பரமு கிருஷ்ணகுமார் 31-3-86ல்மேற்படி மகாவித்தியாலயத்தில் வைத்து பூநகரி 4ம்கட்டை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் பயிலும் பாடசாலை வெறிச்சோடிக் கிடக்கிறது.

*9-4-86* புதன்

பலாலி விமான நிலைய விஸ்த்தரிப்பால் மாணவர் கல்வி பாதிப்பு

*10-4-86* வியாழன்

மினி சினிமாக்கள் மாணவரின் கல்வி வளர்ச்சியைப் பாதிக்கின்றன. தேசிய இன நெருக்கடி உச்சக்கட்டத்தை அடைந்துள்ள இன்றைய காலகட்

டத்திலே தமிழ் மக்களை தேசிய உணர்வுகளிலிருந்து மழுங்கடிக்கத் தக்க வகையிலான மினி சினிமாக்களும் தனியார் ஒலிபரப்புகளும் எமது பிரதேசத்தில் அண்மைக் காலத்தில் அதிகரித்து வருவதானது மிகவும் கவலை தருவதாக உள்ளது. இவ்வாறு காவலூர் இலக்கிய வட்டம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

## ஈழ முரசிலிருந்து:-

**10-1-86** வெள்ளி

அதிபர் முகாமிற்கு அழைப்பு. ஆனால் அவருக்கே அச்சம் யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாமிற்கு அருகாமையிலுள்ள பிரபல்ய கல்லூரி ஒன்றின் அதிபர் கோட்டை முகாமிற்கு வந்து இராணுவ அதிகாரியைச் சந்திக்க வேண்டுமென அழைக்கப்பட்டுள்ளனர்.

**22-1-86**

பாதுகாப்பு வலயத்தால் 10பாடசாலைகள் மூடும்நிலை.

**23-1-86** வியாழன்

தமிழாசிரியர் சங்க அறிக்கை

30க்கும் அதிகம் இயங்க முடியாத நிலையில்.

**30-1-86** வியாழன்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு அனுமதி கோரி விண்ணப்பிக்கும் அகதி மாணவர்களினதும், பாதிக்கப்பட்ட மாணவர்களினதும் விண்ணப்பங்களை யாழ்கல்வித்திணைக்களம் பகடைக்காய்களாகத் தூக்கி வீசுவதாகப் பருத்தித்துறை பிரஜைகள் குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

**1-3-86** கிளிநொச்சியில் நேரடி மோதல்; மாணவர்காயம்.

**20- 3- 86**

திருமலை வவுனியா, முல்லைத்தீவு மயிலிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த அநேக மாணவர்கள் தற்போது புங்குடுதீவில் உள்ள பாடசாலைகளை நாடி வந்துள்ளனர். ஏற்கனவே அவர்கள் படித்த பாடசாலைகளில் தொடர்ந்து படிப்பை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் அகதிகளாக இவ்விடம் வந்துள்ள தங்களுக்கு இங்குள்ள பாடசாலைகளில் அனுமதி வழங்குமாறு இம் மாணவர்கள் பாடசாலை ஆசிரியர்களைக் கோரியுள்ளனர்.

**27-3-86**

"ஒரு காலத்தில் கல்வியால் உயர்ந்த யாழ்-நாட்டில் தான் இன்று அதிகளவில் மாணவர்களின் கல்வித்தரம் மிக மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. அரசின்• ஒடுக்கு முறையும் இப்பகுதியில் தலைவிரித்தாடும் தனியார் ஒளிபரப்புக்களும் இதற்குக் காரணம்" என்று கூறும் பிரசுரம் தேசிய மாணவர் மன்ற பருத்தித்துறை உடுப்பிட்டிக் கிளைகளால் வெளியிடப்பட்டுள்ளது.

**4-4-86**

பரீட்சைத்திணைக்கள அசமந்தப் போக்கினால் தொழில் நுட்ப வர்த்தக மாணவர்கள் பாதிப்பு.

**17-4-86**

தெல்லிப்பளைப் பகுதியில் நேற்று நண்பகல் திடீரென மேற்கொள்ளப்பட்ட ஹெலிகொப்டர் தாக்குதலினால் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் கட்டட மொன்று பெருஞ் சேதமடைந்துள்ளது.

இந்த மாணவர்கள் தஞ்சமடைந்த இடத்தில் கல்வி பெறமுடியாது அவதி.

**18-4-86**

பூநகரி மகாவித்தியாலய அலுவலகம் அதனுள் இருந்த பலஅலுமாரிகள் பாடசாலை தஸ்தாவேஜுகள், விலைமதிப்புள்ள பொருள்கள் யாவும் முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளது. அலுவலகத்தோடு சேர்ந்த நூறுஅடி நீளமான மண்டபமும் தீப்பற்றி எரிந்துகொண்டிருக்கக் காணப்பட்டு அது தொடர்ந்து எரியா யாமல் அணைக்கப்பட்டது.

**22-4-86**

யூனியன் கல்லூரி சேதம். நஷ்டஈடு கேட்கப்படுகிறது.

**5-5-86**

பூநகரி மகாவித்தியாலயம் எரிக்கப்பட்டதால் நஷ்டம் ஒன்றேகால் லட்சம் ரூபா- இப்பாடசாலையில் தவணை இறுதி நாளில் ஓர் மாணவன் பாடசாலையில் வைத்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து பாடசாலை மூடப்பட்டதால் இப்போது வளர்ந்த மாணவர்களை பாடசாலைக்கு அனுப்ப அச்சம் கொண்டுள்ளனர்.

**7-5-86**

பணிப்பாளர் சுந்தரலிங்கம் சாடுகிறார். பொறுப்பற்ற சில ஆசிரியர், ரியூட்டறிகள் மூலம் கல்விநிலைக்கே பெரிய பாதிப்பு.

**11-5-86**

மாணவர் வரவின்மையால் பூநகரி மகாவித்தியாலயம் வெறிச்சோடிக் கிடக்கிறது.

**15-5-86**

பலாலிமுகாம் எல்லை விஸ்த்தரிப்பினால் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையும் சாதனைப்பாடசாலையும் இராணுவவசம்.

**19-5-86**

வசாவிளான், மயிலிட்டி, ஊர்காவற்றுறைப் பகுதியில் நான்கு புதிய குட்டி இராணுவமுகாம்கள் உதயம்.

மயிலிட்டி கலைமகள் பாடசாலை, ஊர்காவற்துறை அந்தனீஸ் பாடசாலை வசாவிளான் மகாவித்தியாலயம் ஆகியன மினி முகாம்களாக்கப்பட்டன.

20- 5- 86

வசாவிளான் மகாவித்தியாலய விடுதி மாணவ மாணவிகளையும் ஊழியர்களையும் காணவில்லை.

24- 5- 86

வசாவிளான் இராணுவமுகாம் விஸ்த்தரிப்பு.

25- 5- 86

பலாலி இராணுவமுகாம் விஸ்த்தரிப்பு நடவடிக்கையால் அங்குள்ள ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, பலாலி சாதனா பாடசாலை, வசாவிளான் சந்தியிலுள்ள ஸ்ரீவேற்பிள்ளை வித்தியாலயம் ஏற்கனேவே மூடப்பட்டன. இப்போது குரும்பசிட்டி பொன் பரமானந்த மகாவித்தியாலயம், மயிலிட்டி ஞானோதய வித்தியாலயம், வறுத்தலை விளான் தமிழ்க் கலவன் பாடசாலை, புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயம் என்பன இயங்க முடியாமல் உள்ளன.

யாழ்நகரிலுள்ள குறிப்பிட்ட சில பகுதிகளில் ஹிரோயின், ஹஸீன் போன்ற போதை வஸ்த்துக்களை சாதாரண பலசரக்குக் கடைகளிலும் தேனீர் கடைகளிலும் கஷ்டம் எதுவுமின்றிப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. இதனால் பாடசாலை மாணவர் முதல் வயது சென்றவர்கள் வரையில் பெரும்பாலனவர்கள் சிறிது சிறிதாகப் போதைவஸ்த்துகளுக்கு அடிமையாகின்றனர். ஆஸ்பத்திரியிலும் பலர் அனுமதி. நோய்வாய்ப்பட்ட பல இளைஞர்களுக்குச் சிகிச்சை.

26- 5- 86

வல்வையில் பாடசாலைகளும் சேதம் மாணவன் காயம்.

4- 6- 86

வசாவிளான் பலாலி இராணுவ முகாம்களை அண்டியுள்ள பாடசாலைகளில் பல இயங்காமலும் பல மூடப்பட்டுள்ளதால் சுமார் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

5- 6- 86

பாடசாலை அதிபர் மீது இராணுவம் தாக்குதல்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கோபாலபுரம் பாடசாலையின் அதிபர் திரு.கிருபைராஜா இராணுவத்தால் தாக்கப்பட்டார்.

## உதயனிலிருந்து

6- 3- 86

மன்னாரில் பரப்புக்கடந்தான் மகாவித்தியாலயம் யுத்த விமானத்திலிருந்து ஏவப்பட்ட குண்டினால் முற்றாகச் சேதம் அடைந்தது.

4- 6- 86

போதைவஸ்த்து 2ஆயிரம்பேர் பாதிப்பு. மாணவ மாணவியரும் அடிமைகள் தீவுப்பகுதியில் 64பாடசாலைகளுக்குத் தற்காலிக விடுமுறை.

15- 6- 86

வல்வெட்டித்துறை பாடசாலைகள் தொடர்ந்து மூடப்படும் நிலை.

16– 6- 86

கிளிநொச்சி ஆஸ்பத்திரி பாடசாலைகள் மீது விமானக்குண்டு வீச்சு.

---

## காலம் ஒருநாள் மாறும்

அண்மைக் காலமாக நடக்கும் பிரச்சனை பற்றியும் அரசாங்கத்தின் போக்குப்பற்றியும் யாரிடமிருந்தாவது அறிய ஆவலுடன் குஞ்சம் மாக்கா திண்ணையில் இருந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருக்கையில் மீரா அவ்வழியாக போய்க் கொண்டிருக்கும் போது

குஞ்:- மீரா,மீரா இஞ்சை வாடிபிள்ளை, இஞ்ச வா உன்னை எத்தனை நாளாத் தேடிக் கொண்டிருக்கிறன். கண்ணிலை எத்துப் பட மாட்டேங்கிறியே இப்ப துலையாலையே வாறாய்பிள்ளை.

மீரா:- என்ன குஞ்சமாக்கா நான் கோவிலடியிலை இருக்கிற ஆரம்பசுகாதார நிலையத்தில் இருந்து தான் வாறன் அங்கை இப்ப பிள்ளைகள் வாறதில்லை நானும் சுமதியும் வசந்தியும் தான் அதிலை நிற்கிறனுங்கள். அதாலை நேரம் கிடைக்கிறதில்லை.

குஞ்:- ஏன்டிபிள்ளை மீரா 20,25 பிள்ளைகளுக்கு கிட்ட படிச்சுட்டு முந்தி நிலையத்திலை நின்டுச்சினமே. ஏன் இப்ப அந்தப் பிள்ளைகள் வாறதில்லையே.

மீரா:- முந்தி வந்தவை குஞ்சமாக்கா முந்திவந்தவர்களிலை கொஞ்சப்பேர் வெளியிலை போட்டினம். கொஞ்சப்பேர் வேலை பார்க்கினமாம். சிலபேர் 87,88லை A/L சோதனை எடுக்கிறத்திற்கு ரியூசனும்

குஞ்:- மெய்யேபிள்ளை வெளியாலை போற தெண்டு தெரிஞ்ச ஆட்கள் ஏன் இஞ்ச வந்து இந்தப் பிள்ளைகளையும் மினக்கடுத்தி அதுகளிட்டை இருந்து படிச்சுப் போட்டு வெளிக்கிட்டவை ஒரு வேளை இதைப்படிச்சுப்போட்டு வெளியிலை வேலை எடுக்கிற சுகம் என்று படிச்சவைபோல

மீரா:- எனக்கும் அப்பிடித்தான் படுகுது குஞ்சமாக்கா என்ன நோக்கத்திற்காக இந்த நிலையங்கள் ஆரம்பித்ததோ அந்த நோக்கங்களில் சிறிதளவேனும் இவர் உணரவில்லை. இப்போது பிரச்சினையள் மோசமடைந்து வாற வேளையிலை எங்கு பார்த்தாலும் காயங்களும், இரத்தப் பெருக்கும் சாவும் தான். காயம் ஏற்பட்ட இடத்திலிருந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு போறதிற்குள்ளை எத்தனை சாகுது இதை எல்லாம் உணர்ந்து வேலை செய்யிற ஆட்கள் கொஞ்சப் பேர்தான். மிச்சப்பேர் எல்லாம் - - - -

குஞ்:- முழுச்சுயநலவாதிகள் பிள்ளை

மீரா:- இவங்களெல்லாம் திருந்திற காலம் கெதியாய் வரும் குஞ்சம்மாக்கா நான் போட்டுவாறன்.

# முடிந்ததைச் சொல்கிறோம்

**கேள்வி:** பெறப்படும் தமிழீழம் பொருளாதார, அரசியல் ரீதியில் வலுவுள்ளதாக அமைய, அமைக்கக்கூடிய திட்டங்கள் யோசனைகள் எதுவும் கைவசம் உள்ளனவா? அவற்றில் பெண்களின் பங்களிப்பு எத்தகையது?

**பதில்:** தமிழீழ விடுதலையில் முனைப்பாகவுள்ள முற்போக்கு சக்திகளிடம் கேளுங்கள் நிறையத் திட்டங்கள் உண்டு. நீங்கள் நினைப்பது போல் திட்டங்களுக்கு இங்கு பஞ்சமில்லை. ஏற்ற காலத்தில் ஏற்றவாறு நடைமுறைப் படுத்துவதில் மக்களின் ஒத்துழைப்பும் ஒருங்கிணைவுமே பொருளாதார அரசியல் ரீதியில் ஆரோக்கியமான தமிழீழம் அமைய வகை செய்யும்.

பெண்கள் அமைப்புகள் பெண்களை ஒரு அமைப்பின்கீழ் கொண்டுவந்து அரசியல்தெளிவைக் கொடுப்பதாலும், மற்றும் தொழிற் பயிற்சிகளைக் கொடுத்து உள்ளூர் உற்பத்தியைப் பெருக்குதல், வீட்டுத்தோட்டம் செய்தல் மருத்துவத்தின் மூலமும் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மக்களுக்குச் சொல்லிக்கொடுப்பதன் மூலமும் மக்களை அழிவுகளிலிருந்து காப்பாற்றி பொருளாதாரத்தை மேம்படுத்தலாம்.

**கேள்வி:-** காற்றுடி மூலம் நீரிறைக்கும் இயந்திரம் பற்றி தெளிவற்ற நோக்கு இன்னமும் நிலவி வருகிறது. இதன் அமைப்பு தொழிற்பாடு, அமைக்கப்படக்கூடிய இடங்கள் இதற்குத் தேவையான பொருளாதாரம் பற்றிய முழு விபரங்களையும் அடுத்த இதழில் தருவீர்களா?

**பதில்:-** அடுத்த இதழில் இல்லையாயினும் அதற்கடுத்த இதழிலாவது அதைப்பற்றிய விபரத்தைத் தருவதில் மகிழ்ச்சியடைகிறோம்

**கேள்வி:-** பெண்களை அடிமைப்படுத்துகிறார்கள், அதை உடைத்தெறிவோம் என்று சஞ்சிகைகளில் முழங்குவதனால் மட்டும் பெண் விடுதலையை வென்றெடுக்கலாம் என்று நினைக்கிறீர்களா?

**பதில்:-** இதே "சுதந்திரப்பறவைகள் -பறவை 6" இல் அளவுகோலை மாற்றுங்கள்" என்ற கட்டுரையைப் படியுங்கள்.

**கேள்வி:-** இவ்வருட இறுதிக்குள் தமிழீழம் கிடைக்கும் என்று சிலர் கதைக்கிறார்களே இதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன

**பதில்:-** கதைப்பவர்கள் காசுக்காரர்களாக இருக்கலாம். குறிப்பிட்ட காலத்திற்குள் விடுதலையையும் விலைபேசி வாங்கிவிடலாம் என நினைக்கிறார்கள்.

ஈழவிடுதலைப் போராட்டத்தின் வெற்றிப் பாதையென்பது தனியே இயக்கங்களினதும் எதிரிகளினதும் நடவடிக்கையில் தங்கியிருக்கவில்லை. எமது நாட்டின் புவியியல்சார்நிலைமை மற்றும் அந்நிய நாடுகளின் தலையீடு சர்வதேச ஏகாதிபத்தியவாதிகளின் தலையீடு போன்ற காரணிகளாலும் நிர்ணயிக்கப்படுகிறது. எது எப்படி இருப்பினும் ஈழவிடுதலைப் போராட்ட வரலாற்றைப் படிக்குமிடத்தும் போராட்ட நடவடிக்கைகளை அவதானிக்குமிடத்தும் விடுதலைப் பாதையானது பல திசைகளில் கோணங்களில் திரும்பினாலும் கிடையாகச் சென்றாலும் வெற்றி என்ற பெரியமலையின் உச்சிக்கே போகிறது என்பது தெளிவாகப் புரிகிறது.

**கேள்வி:-** பினி சினிமாக்களின் சினிமா ஒளிபரப்பினால் பிள்ளைகள் படிப்பையே மறந்துவிடுகிறார்கள். இதை தவிர்த்து ஏதாவது பிரயோசனமான ஒளிபரப்பை எல்லா இடங்களிலும்ஒளிபாப்பினால் என் போன்றவர்களுக்குப் பிரயோசனமாக இருக்கும் செய்வீர்களா?

**பதில்:-** நிச்சயமாக அது உங்களால்தான் முடியும். ஏனெனில் உள்ளூர் சினிமா ஒளிபரப்பால் பாதிக்கப்பட்டவர்கள் நீங்கள். மாணவர் சமுதாயம் எனவே மாணவர் எல்லோரும் ஒன்று சேருங்கள். உங்களுக்கேற்படும் பாதிப்பைக் கூறி சினிமாப்படங்களைக் குறைக்கும்படி கோரிக்கையொன்றை ஒளிபரப்புபவர்களிடம் கொடுங்கள் நிச்சயமாக உங்கள்

கோரிக்கை நிறைவேறுமென நினைக்கின்றோம்.

**கேள்வி:-** தற்போது அறிமுகமாகும் டிஸ்கோ போன்ற புதுமையான மேற்கத்திய நடனநிகழ்ச்சிகள் ஈழத்திலும் அரங்கேறுவதைப் பற்றி உங்கள் கருத்து?

தேசவிமோசன இயக்கங்களின் நடவடிக்கையை பின்தள்ளும் விதமாக முதலாளித்துவ ஏகாதிபத்திய கலாச்சாரம் மக்களை மயக்க நிலைக்குத் தள்ளும் ஒரு கருவியாகவுள்ளது. இந்தவகையில் இன்றைய "டிஸ்கோ" அரங்கேற்றங்கள் அமைந்துள்ளன.

---

# தீ பற்றிக் கொண்டால்- - -

வீடுகளில் தீப்பற்றிக் கொண்டால் முதல் தீப்பற்றிய வீட்டின் தீயை அணைக்க முற்படுதல் வேண்டும். அயலில் உள்ள வீடுகள் தீப்பற்றாத வண்ணம் பார்த்துக் கொள்ளல் வேண்டும் உடனடியாக தீப்பற்றிய வீட்டின் தீயை அணைக்க நீரை ஊற்றியோ, அல்லது வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். போக்கு வரத்து அதிகமுள்ள குடியிருப்புகளாயின் வீதியில் தடைகளை ஏற்படுத்துதல் அவசியம். ஏனெனில் அந்தச் சூழ்நிலையில் பரபரப்பும், ஒழுகின்மையும் காணப்படும் அந்நேரத்தில் மக்கள் வாகனங்களைக் கவனிக்கும் நிலையில் இருக்கமாட்டார்கள். இதனால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. அத்துடன் பெற்றோல் வாயு நிரப்பிய வாகனங்களாயின் அவற்றில் தீபற்றி வாகனம் எரிய சந்தர்ப்பம் உண்டு. இதனால் தீ மேலும் பரவ ஆரம்பிக்கும். தீப்பற்றிய வீடு முழுவதுமாக தீப்பற்றி எரிய ஆரம்பித்தால் குடிமனைகள் மிகவும் நெருக்கமாக அமைந்தால் அருகிலுள்ள வீடுகளுக்கும் தண்ணீரை ஊற்றி முன் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

தீப்பிடித்த வீட்டினுள் ஒருவர் அகப்பட்டு வரமுடியாத நிலையில் அவரைக் காப்பாற்ற அவர் இருக்கும் அறைக்குள் போகும் பொழுது அவருக்குக்குரல் கொடுத்தபடி போனால் அவர் எம்மை நெருங்கி வரும் பொழுது தீயினுள் நாம் அகப்படும் நேரத்தினைக் குறைக்க முடியும். அத்துடன் நாம் அவ்வறைக்குள் புகும் பொழுது நிலத்துடன் தவழ்ந்து போதல் வேண்டும். அதனால் அவ்வறைக்குள் இருக்கும் புகை எம்மைத் தாக்காது பாதுகாத்துக் கொள்ளலாம். மேலும் கையில் ஒரு நீண்ட கயிற்றைக் கொண்டு செல்வதும் உகந்தது. அறையினுள் புகை அதிகமாகி எமது கண்ணைத் திறக்க முடியாத நிலை ஏற்படும் பொழுது கயிற்றின் வழியே வெளியே வருவதற்கு சுலபமாக இருக்கும்.

# இந்திய இலங்கை உறவு (1977 - 1986)
## ஒரு கண்ணோட்டம்

அரசியல் சூழ்நிலை ரீதியாகவும், புவியியல் சார்பு நிலை ரீதியாகவும் இந்திய அரசு சிறீலங்கா அரசின் மீது ஆதிக்கம் செலுததக்கூடிய வாய்ப்புகள் அதிகமுண்டு என்ற பயம் அன்றுதொட்டு இன்றுவரை இருந்துகொண்டே வருகின்றது. இதன் காரணமாக சிறீலங்கா அரசிடமும் மக்களிடமும் இந்திய எதிர்ப்புணர்வு உள்ளூர வளர்ந்து வந்துள்ளது. இதனைப் புரிந்து கொண்ட ஏகாதிபத்திய வல்லரசு அமெரிக்கா இந்திய அரசை குறிவைக்கும், வேவுபார்க்கும் நோககத திற்காக இலங்கையுடன் நட்புககரததை நீட்டியது. இந்நிலையில் சிறீலங்கா அரசு இந்தியாவை எதிர்க்கத் தனக்கொரு பெரிய வல்லரசு நாட்டின் உதவி நிச்சயம் தேவை என உணர்ந்து அமெரிக்காவுடன் வலுவான நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொண்டது. இந்தியாவுடனன நட்புறவைத் துண்டித்துக் கொண்டது.

கிழக்குமாகாணமாகிய திருகோணமலையில் "பிறிமாக் கொம்பனி" எண்ணெய்க்கு தம போன்ற முதலீட்டுத் தளங்களையும் மற்றும் Voice of America போன்றவற்றை அமெரிக்கா ஏற்படுத்திக் கொள்ள சிறீலங்கா அரசு இணங்கிக்கொண்டது. மேற்கண்ட காரணங்களுக்காகவே.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் எண்ணெய்க் குதத்தை இந்தியாவிற்குக் கொடுத்திருக்கலாமே என்று கூறியபோது அது சிறு தொகை முதலீடு என்று மழுப்பியடித்து விட்டார்கள்.

Volee of America விற்குரிய நிலம் அங்கு குடியிருந்த மக்களின் எதிர்ப்பிற்கு மத்தியில் அவர்களை அங்கிருந்து வெளியேற்றியே கொடுக்கப்படுகின்றது. Voice of America அமைப்பதற்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்ததும் எம் மக்களுக்குத் தெரிந்ததே.

இவ்வாறு சிறீலங்கா அரசு அமெரிக்க ஏகாதிபத்திய அரசைப்பந்தம் பிடித்து அதன் ஆலோசனைக்கிணங்கவே இந்தியாவிற்கு எல்லைப்பிரச்சனையுள்ள அமெரிக்க நட்புறவு நாடுகளான பாகிஸ்தானுடனும், சீனாவுடனும் நட்பை வளர்தது வருகின்றது. இதன் விளைவே 1985ல் ஜே. ஆரின் அமெரிக்க விஜயம், பாகிஸ்தான் விஜயம், சீன விஜயம், பாகிஸ்தான, சீன, ஜனாதிபதி இலங்கை விஜயம் விக்டோரியா நீர்வீழ்ச்சிததிட்டம் திறப்பதற்கு பிரிட்டிஷ் மந்திரி மாக்கிரட் தட்சரின் விஜயம்.

மேலும் இலங்கை இனப்பிரச்சனையானது சிறீலங்கா அரசிற்கு மிகுந்த பாதுகாப்பிற்கான செலவினததையும், (ஆண்டொன்றுக்கு 590கோடிக்கு மேல்) அச்சுறுத்தலையும், பொருளாதாரப் பிரச்சனையையும் ஏற்படுத்திய போது அதை தீர்த்து வைக்க இந்திய அரசெடுக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைக்க மறுக்கின்றது. பேச்சுவார்த்தைகளில் ஜனாதிபதியோ. அல்லது பிரதமமந்திரியோ கலந்து கொள்ளாமல் ஏனோ தானோ என்று கீழ்மட்ட மந்திரிகளை அனுப்பிவைக்கிறது. தீர்வுக்கான சரியான ஆலோசனைகளைத் தெரிவிக்காது பின்னடிக்கின்றது. காந்தியத் தலைவருடன் இதுபற்றி ஆலோசிக்க அக்கறையின்றி இருப்பது எல்லாம் இத்தியாவின் நட்பை நிராகரிப்பதன் நோக்கமே ஆகும்.

மேலும் சிறீலங்கா பிரதமமந்திரி பிறேமதாசா இந்திய அரசு தனது விமானப்படையை திருவனந்த புரத்திற்கு மாற்றிவிட்டது. ஒரு "சிகரெட்" பத்தி முடிப்பதற்குள் இந்திய இராணுவம் இங்கு வந்து குதிக்கலாம். நம்மை ஆக்கிரமிக்கலாம். என்று பேசினர்.

ஆனால் இவர்களுடைய குரல் வீச்சு இந்திய அரசாங்கத்திற்கு எதுவித குழப்பத்தையும் ஏற்படுத்தவில்லை.

ஜே ஆர் பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டியில் அவ்வாறு இந்திய ஆக்கிரமிப்பு ஏதும் நிகழ்ந்தால் கொழும்பில் சிங்களவர் மத்தியில் வாழ்கின்ற தமிழர்கள் உயிருடன் மிஞ்சமாட்டார் கள் என்று பயமுறுத்தி இருந்தார்.

இந்தப் பயமுறுத்தலுக்கும் இங்கே எந்த சல சலப்பும் ஏற்படவில்லை. மேலும் இந்தியா இலங்கைக்கு விட்டுக்கொடுத்து இலங்கை இனப் பிரச்சனையைக் கையாள வந்த மந்திரிமார்களை மாற்றி பேச்சுவார்த்தைக்குரிய இடத்தை மாற்றி இலங்கையின் நட்பைப் பெற முயல்கிறது. இருப் பினும் இலங்கை அரசு மசிவதாக இல்லை சாக் குப் போக்குச் சொல்லி வருகிறது.

இலங்கை இனப்பிரச்சனை இந்திய நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும் இலங்கை யில் சுமுகநிலை விரைவில ஏற்பட்டாற்தான் இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்ப முடியும் என்ற பிரச்சனைகளை முன்வைத்தே இந்திய அரசு இலங்கைப் பிரச்சனையில் தலையிட்டாலும் உள் ளூர தெற்காசியப் பிராந்திய நாடுகளைத் தனது நட்பிற்குள்ளும் கட்டுப்பாடு கொள்கைக்குள்ளும் வைத்திருக்கவே இந்திய அரசு விரும்புகின்றது.

இலங்கை தெற்காசிய நாடாக இருப்பது டன் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் ஒரு வல்லர சாக இருப்பதால் இந்துசமுத்திரம் சமாதானப் பிராந்தியமாக இருக்க வேண்டுமென்ற கொள் கைக்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்க வேண்டு மென்று இந்தியா விரும்புகின்றது. அதற்கு இணங்குவதாக இலங்கை செயற்படவில்லை. இத ஞல் இந்தியாவின் கண்ணேட்டம் பரந்தளவி லாக மாறவேண்டும்.

## பணமே அளவு கோலாக - - - -

*நான் ஒரு திருடன்*
*எதற்காகத் திருடினேன்*
*வயிற்றுப் பசிக்காக*
*எனக்கு மக்கள் தந்தது*
*அடியும் உதையும்,*
*ஏனென்ருல்,*
*நான் ஓர் வறிய திருடன்.*
*அவனும் ஓர் திருடன்*

*ஆடம்பர வாழ்வுக்காக*
*ஏழைகள் வயிற்றில் அடித்து*
*வசதியாக வாழ்கிருன்.*
*அவனுக்கு மக்கள் கொடுப்பது*
*மதிப்பும் மரியாதையும்*
*மகத்தான வரவேற்பும்.*
*ஏனென்ருல்,*
*அவன் பணக்காரத் திருடன்.*

மனிதனை மனிதனுக மதிக்கும் மனிதப் பண்பு
மக்களுக்கு ஒருமித்து எப்போது வருமோ
அப்போதுதான் பெறப்போகும் விடுதலையை
பேணிக் காக்கமுடியும்.

# சந்தித்தோம்;
# உரையாடினோம்;
# எழுதுகிறோம்.

**கேள்வி:** 'விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு தேவையே இல்லை' என்று சொல்பவர்களைப் பற்றி நீங்கள் கூறவிரும்புவது என்ன?

**பதில்:** அவர்களைப்பற்றி என்றால் இரண்டு விதமான முடிவுக்கே வரமுடியும். ஒன்று பெண்கள் விழித்துக் கொண்டால், அடக்கு முறைக்கெதிராகப் போராடப் புறப்பட்டால் தாம் இரண்டாம் தரமானதாக சமூகத்தால் கணிக்கப்படுவதை எதிர்த்தே தீருவார்கள் என்ற அச்சம் கொண்டவர்கள் மற்றையது விடுதலைப் போராட்டத்தில் தம்மைப் பிணைத்துக் கொண்டு வேலை செய்பவர்கள் ஒழுக்கம் தவறி நடக்க வாய்ப்பு அதிகம் உண்டு என்ற தவறான கருத்தை தம் மனதில் வளர்த்துக் கொண்டவர்கள். இரண்டு கருத்துக்களையும் கொண்டவர்களே எங்கள் இனத்தில் பெரும்பான்மையோராக இருப்பார்கள் என்றால் சோஷலிசத் தமிழீழம் காண நீண்டகாலமே எடுக்கும் என்பதில் எந்தவித ஐயப்பாடுமில்லை.

**கேள்வி:** விடுதலை ஸ்தாபனங்களுள் தம்மை இணைத்துக்கொள்கின்ற பெண்களின் ஒழுக்கம் சம்பந்தமாக நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?

**பதில்:** எந்தவொரு விடுதலை ஸ்தாபனத்தில் ஒழுக்கம் சம்பந்தமாக சரியான கட்டுப்பாடும் ஒழுங்கும் இருக்கின்றதோ அந்த ஸ்தாபனமே விடுதலைப் போராட்டத்தை சரியான பாதையில் நடத்திச் செல்லும் அதேபோல எந்த ஒரு அமைப்பிலுள்ள பெண்கள் ஒழுக்கம் சம்பந்தமாக சரியான கட்டுப்பாட்டை விதித்து அதனை மீறாமல் தம் கடமைகளைச் செய்கிறார்களோ அவர்களால் தான் பெண் விடுதலை சம்பந்தமாக சரியான முறையில் சிந்தித்து செயற்பட முடியும். தெரிந்து கொண்டே ஒழுக்கம் தவறி நடக்கும் எந்த ஒரு பெண் மட்டுமல்ல ஆணும் மன்னிக்கப்பட முடியாதவர்கள் ஒரு பெண் ஒழுக்கம் தவறி நடக்கக்காரணம் வறுமையே என்று அடித்துக்கூறி இந்த சமூக அமைப்பின் மேல் முழுப்பழியையும் சிலர் சுமத்துவார்கள். ஆனால் தெரிந்து கொண்டே ஒழுக்கம் தவறும் பெண்களைக் கணக்கெடுத்துப் பார்ப்போமென்றால் அங்கு வறுமையால் தவறு செய்பவர்களின் விகிதம் மிகமிகக் குறைவாகவே இருக்கும்.

**கேள்வி:** அப்படியானால் விபச்சாரத்திற்கு வறுமைதான் காரணம் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லையா?

**பதில்:** நிச்சயமாக ஏற்றுக் கொள்ளவில்லை அப்படியானால் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் பெண்கள் எல்லோரும் விபச்சாரம் செய்கிறார்கள் என்றல்லவா ஆகிவிடும். பணத் தேவை இல்லாமல் பண ஆசையால்தான் சிலர் விபச்சாரிகளாக மாறுகிறார்கள். பணத்தில் மோகம் கொள்ளக் காரணமாக அமைவது ஆடம்பர வாழ்வு வாழ ஆசைப்படுவதேயாகும். இப்படியான வாழ்வு வாழ பெண்களைத் தூண்டுவதில் பெரும்பங்கு வகிப்பவை தரம் கெட்ட சினிமாக்களும் வியாபார நோக்கமே குறிக்கோளாக கீழ்த்தர உணர்வுகளைத் தூண்டும் விதத்தில் எழுதப்படும் சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் தான் இவற்றால் தூண்டப்பட்டு, ஆடம்பரவாழ்வு வாழும் வசதி படைத்த பெண்களைப் பார்த்து வசதி குறைந்த பெண்கள் தாமும் அவ்வாறு வாழ ஆசைப்படுகிறார்கள். அதுவும் பெண்களில் சிலரை ஒழுக்கம் தவறி நடக்க வைக்கிறது.

**கேள்வி:** அப்படியானால் இந்த சமூக அமைப்புத்தான் பெண்கள் விபச்சாரிகளாகக் காரணம் என்பதை முதலில் மறுத்துக் கூறியுள்ளீர்களே?

**பதில்:** எல்லாப்பிழைகளையும் சமூகத்தின் மேல் சுமத்தி தப்பிக் கொள்ளப் பார்க்கக் கூடாது என்பதையே சொல்ல விரும்புகிறேன்

உயர்ந்தவன்- தாழ்ந்தவன், ஏழை- பணக்காரன் என்று பேதங்கள் பல பார்த்து சிலர் பலரை அடக்கும் இந்த சமூகஅமைப்பு மாறியே ஆக வேண்டும் என்பதிலேயோ அப்படி மாறினல்தான் அரசியல், சமூக, பொருளாதார பிரச்சனைகள் தீரும் என்பதிலேயோ எனக்கு மறுப்பில்லை. ஆனல் நாங்கள் தவறு செய்ய இந்த சமூக அமைப்புத்தான் என்று கூறிக் கொண்டு ஒழுக்கம் தவறி நடந்து அந்தப் பழியை சமூகத்தின் மேல் சுமத்துவது குற்றம் என்றே கூறுகிறேன்.

**கேள்வி:** கற்புப் பற்றிய விளக்கங்கள் பல் வேருகக் கூறப்பட்டு வரும் இவ்வேளையில் அதனைப் பற்றிய உங்கள் கருத்து என்ன?

**பதில்;** 'கற்பு நிலையென்று சொல்ல வந்தால் இரு கட்சிக்கும் அஃதைப் பொதுவில் வைப்போம்' என்று பாரதி பாடிய பாடலை எல்லோரும் வாயளவில் தான் சொல்கிருர்கள். அதனை அவர்கள் நடைமுறையில் கடைப்பிடிக்கிருர்களா? விளங்கி நடக்கிருர்களா? ஏற்றுக் கொள்கிருர்களா? என்பது கேள்விக்குரிய விடயமே. கற்பழிக்கப்பட்ட பெண்ணைப் பற்றித்தான் விமர்சனங்கள் உள்ளதேயன்றி கற்பழித்த ஆணைப்பற்றி யாருமே பேசுவதாக இல்லை.

**கேள்வி:** கற்பழிக்கப்பட்ட பெண்கள் தற்கொலை செய்யாவிட்டால் ஏசியும் கேலி செய்தும் அவர்கள் மனங்களை வதைப்பவர்களுக்கு என்ன சொல்லி புரியவைக்கலாம்?

**பதில்:** கற்பு என்பது ஓர் ஒழுக்கம் என்று கொண்டால் அது ஆண், பெண் இருபாலாராலும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். தெரிந்து கொண்டே அதிலிருந்தே வழுவுவார்கள் என்ருல் ஆணுயினும்சரி பெண்ணுயினும்சரி சமூகத்தின் இகழ்ச்சிகளை ஏற்றுக்கொள்ளும் தண்டனையை அனுபவித்தே ஆக வேண்டும், ஆனல் எங்கள் சமூகத்திலோ பெண்களுக்குத்தான் கற்பு ஒழுக்கம் வலியுறுத்தப்படுகிறது. இன்று எமது தேசிய விடுதலைப் போராட்ட காலகட்டத்தில் இராணுவத்தினரால் பல இளைஞர்கள் உடலியல் ரீதியாக பல சித்திரவதைகளை அனுபவிக்கிருர்கள். அதே போலத்தான் பெண்கள் மேலும் அவர்களின் விருப்பமில்லாமல் இராணுவத்தினரால் பலாத்காரம் மேற்கொள்ளப்படுகிறது. இராணுவத்தினரால் சித்திரவதை செய்யப்பட்ட ஆணை தூய ஆண் மகனுக ஏற்று கொள்ளும் இந்த சமூகம் உடலியல் ரீதியான துன்புறுத்தல்களை அனுபவித்த பெண்களை அவ்வாறு ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. ஒரு பெண்ணின் விருப்பமின்றி அவள் மேல் பிரயோகிக்கப்படும் பலாத்காரத்தால் அவளின் உடல்நிலையில் ஏற்படும் மாற்றத்தால் அவளை அருவருப்புடன் நோக்கி கேலி செய்வோர் அது அவளின் விருப்பமின்றி நடந்த செயல் என்பதை விளங்கிக் கொள்ள மறுக்கிறது. இனியாவது எங்கள் மக்கள் அதனை விளங்கிக் கொள்ள வேண்டும். இராணுவத்தினரால் பல இடங்களிலும் பெரும்பான்மையான பெண்கள் மேல் வன்முறை பிரயோகிக்கப்படுமானல் அத்தனை பெண்களும் தற்கொலை செய்து கொள்ள வேண்டும். என்று இந்த சமூகம் சொல்லிவிடுமா? யாரென்ருலும் தனது மனைவிக்கோ, மகளுக்கோ, சகோதரிக்கோ, இந்த நிலை ஏற்பட்டால் அவர்களைக் கேலி செய்ய மாட்டார்கள் அடுத்தவருக்கு நடக்கும் போது தமது குடும்பத்தினருக்கு அப்படி நடக்காது என்று எண்ணி விடுகிருர்கள். அப்படி ஒரு நினைப்பு இருக்குமானல் இப்படியெல்லாம் கேலி செய்து வதைக்க மாட்டார்கள்.

கடந்த இதழில் கேட்டிருந்த கேள்விக்கு வந்த பதில்களில் சில இவை. இதனைப் பற்றிய உங்கள் அபிப்பிராயங்களை எழுதி அனுப்புங்கள்.

## (1)

நீங்கள் கேட்டிருந்த "குடும்பப் பொறுப்புள்ளவர்கள் நாட்டுக்காகப் போராட வருவது பைத்தியக்காரத்தனம்" என் கருத்துக்கள் முதலில் நான் என் சொந்தக் கருத்தை எழுதுகின்றேன்.

இவ்விடயத்தில் சற்று நாம் உணர்ச்சிவசப்படாமல் சற்று கூடுதலாக சிந்தித்தோம் ஆனால் முற்றாக அவ்விடயத்தை ஏற்கமுடியவில்லை. அந்த அளவுக்கு எனக்கு துணிவு இல்லை. நீங்கள் சிரிக்கலாம். துணிவைப்பற்றி எத்தனைபக்கங்கள் "சுதந்திரப் பறவைகள் தந்து விட்டன என்று" எனக்கு ஓர் கருத்தை முற்று முழுதாக ஆராயாமல் மறுக்க உரிமை இல்லை. அந்த வாக்கியத்தை சொன்னவர் எப்படிப்பட்ட சூழ்நிலை, சந்தர்ப்பத்தில் சொன்னார் என்பது முக்கியம்.

விடயத்திற்கு வருகின்றேன்;

குடும்பங்கள் என்பது நிச்சயம் ஓர் தாய் தந்தை, பிள்ளைகளைக் கொண்டது. ஏன் நாட்டையும் ஓர் குடும்பமாக நாம் நினைக்கக்கூடாது. குடும்பம் ஒவ்வொன்றிலும் ஒவ்வோர்க்கும் ஒவ்வோர் கடமை, பொறுப்பு என்பன நிறைய உண்டு. அதை நாம் எவரும் மறுக்கவோ மறக்கவோ முடியாது. ஆனால் இந்நாட்டில் நம் குடும்பம் மட்டுமா உள்ளது எத்தனை குடும்பங்கள் வறுமையின் அடித்தளத்தில் அத்திவாரம் இட்டு வாழ்கிறது. நிச்சயம் இக்குடும்பப் பாரம் எல்லோர் கைக்கும் வரும். ஆதலால் நிச்சயம் பொறுப்பு உண்டு. ஆனால் பொறுப்பு என்பது நம் குடும்ப கஸ்ரத்தில் மட்டும் காட்டினால் போதுமா? இது என் மனதில் எழுந்த கேள்வி. நம் ஒவ்வொருவருக்கும் நாடு என்னும் எம் குடும்பத்திற்கு செய்ய வேண்டிய பொறுப்பு நிறைய இருக்கிறது. ஏன் அதை உதறி எறிந்துவிட்டு குடும்பப் பொறுப்பு என்று தனித்து கூறுகிறார்கள்.

சரி அந்த வாக்கியத்தைப் பாவித்த நம் மண்ணின் பிள்ளைகள், நம் வீடு, நம் பணம், நம் சுகம், நம்----- என்று இப்படி தன் தனிக்குடும்பத்துடன் வாழாமல் நம் நாட்டின் புரட்சி வித்தை விதைத்ததில்லாமல் நம் தமிழ்த்தாயின் இளைஞர்கள் நம் நாடு எனும் குடும்பத்தில் உதித்த சகோதரர்கள் ஏன் தன் சுய விருப்பு வெறுப்பை ஒதுக்கி, நம்மை ஒடுக்கி ஆளும் இன வெறியரின் கொட்டத்தை அடக்கி தம்முயிரை தூசு என மதித்து நமக்காக போராடுகிறார்கள். ஆம், அந்த தூய உள்ளங்களான இக்கால யேசுக்களின் இதயத்தில் இவ்வாக்கியம் நிச்சயம் சிலுவையில் அறையும். எத்தனை பெரிய தவறு. இந்த வாக்கியம் என்பது உண்மை இருப்பினும், நம் குடும்பத்திற்கு ஓர் கடமை, பொறுப்பு இருப்பின் ஓரளவு அதையும் நாம் கவனிக்க வேண்டும். ஏனெனில் ஓர் அழியாத வீரியமான சமுதாயம் நாளை உருவாக வேண்டுமாயின் ஓரளவு ஒவ்வோர் குடும்பமும் தம் பொருளாதார, அரசியல் பஞ்சம் இருக்கக்கூடாது. நிச்சயம் அதையும் கவனித்து நாட்டின் பொறுப்பையும் கணிக்கலாம். கட்டாயம் ஆயுதப் புரட்சிதான் நாம் செய்யவேண்டியது என்பதில்லையே நாம் எல்லோரும் இந்நாட்டு வித்துக்கள். நாம் ஏன் குடும்பத்தையும் நாட்டையும் காக்க போராடல் கூடாது உதாரணம்;- பயிர்ச்செய்கை மேற்கொண்டுகொண்டே போராளிகளுக்கு நம்மால் ஆன உதவி (முழுமனதுடன்) என்பனவும் நாம் பங்களிப்புத்தரக் கூடாது?

இங்கு குடும்பத்திற்காக மட்டும் வாழ்ந்து மரணிக்க நேரின் உன் மரணம் நிச்சயம் நால்வர் மனதில் மட்டுமே உணர்ச்சியைக் கிளப்பும். ஆனால் நாட்டிற்காய் வாழ்ந்து உன் மரணம் நிச்சயம் தான், தன் குடும்பம் என்பவர்களின் இதயத்தில் கூட ஓர் புரட்சியை வெடிக்கச் செய்யும். நம் நாட்டையும் நம் வீட்டையும் நாமே காப்போம். எங்கள் ஒற்றுமையும்

ஓர் உன்னத ஆயுதம் தான் இதைப் புரிந்துகொள்வோம். ஆனால் அந்த நம் மண்ணின்கண் மணிகள் இப்படிக் கூறியிருக்க மாட்டார். நிச்சயம் ஏதோ ஒரு சந்தர்ப்பம் அப்படி ஆக்கி விட்டது அவரை. இதைப் பெரிது படுத்தாமல் அவர் நிச்சயம் ஓர் உன்னத யோசனையுடையவராய் திகழ என்னால் ஆன என் (அறிவுக்கெட்டிய அளவு) அபிப்பிராயத்தை தந்தேன். எனக்கு இதைக் கூற தகுதி இருக்கா இல்லையா என்பது எனக்கே தெரியாது. ஆனால் அபிப்பிராயங்களைத் தெரிவிக்க இந்த மண்ணில் எல்லோர்க்கும் உரிமையுண்டு.

-சிவா-

(2)

உலகில் உள்ள எந்த ஒரு நாட்டினைக்கூட எடுத்து நோக்கினாலும் அங்கு எந்த பிரச்சனை என்றாலும் நிலவிக்கொண்டே இருக்கும். நாட்டு மக்கள் எல்லோரும் கூட சொந்த மண்ணை மீட்பதற்கும், சொந்த இலட்சியங்களை நிறைவேற்றுவதற்கும் போராடுகிறார்கள் அதாவது ஏழை பணக்காரன், உயர்ந்தசாதி தாழ்ந்தசாதி என்ற கருத்துக்களை உதறித்தள்ளிவிட்டு, எல்லோரும் ஒரே சாதி என்ற நோக்கில் எதுவித வேறுபாடும்இன்றி வாழ வேண்டும் என்பதற்காக போராடுகிறார்கள். ஏனைய இனத்தவரின் கட்சிக்கு அடிபணியாமலும், சித்திரவதைக்கு உட்படாமலும் சுதந்திரமாக வாழ்வதற்கென தமக்கென ஒரு நாட்டை மீட்டு எடுப்பதற்காக போராடுகிறார்கள்.

போராட்ட காலத்தில் எந்த ஒரு ஆண் என்றாலும் பெண் என்றாலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. குடும்பத்தில் இருந்து கொண்டோ அல்லது கல்வியைக் கற்றுக்கொண்டோ அல்லது வேலைசெய்து கொண்டோ தேவையான சிறு உதவிகளைச் செய்யமுடியும். சிறு உதவி எனக் கூறும் இடத்து சமூகத்தில் உள்ள சமூக விரோதியை இனம் காணுதல் இனம் கண்டு உண்மையான விரோதி என அறிந்தால் தண்டனை வழங்குதல். தனக்கு வசதியான நேரத்தில் போராட்டத்திற்கு சென்ற தோழர்களுடன் சேர்ந்து புத்தகம் ஏனைய நூல்கள் போன்றவற்றை விற்பனைசெய்து கொடுத்தல் என கூறலாம்.

எவருக்கும் போராட்டத்தில் இறங்குவது மிகவும் விருப்பம் இருக்கலாம். ஆனாலும் அவர் தனது குடும்பத்தின் நிலைமையை உணர்ந்தே செயற்பட வேண்டும், அதே நேரத்தில் கல்வி கற்கும் மாணவன் அல்லது மாணவி கல்வியை உதறித்தள்ளிவிட்டு போராட தன்னை ஈடுபடுத்திக் கொள்வது முற்றிலும் தவறானது. கல்வி அறிவு இன்றி போராடுவதில் எதுவித பயனும் இல்லை. வருங்கால சந்ததிக்கே பெரும் தாக்கம் ஏற்பட இடம் உண்டு.

நாம் இலங்கையை எடுத்து நோக்கின் தற்பொழுது பலவிதமான இன்னல்களுக்கு மத்தியில் மக்கள் எல்லோரும் வாழ்க்கையை ஈட்டுச் செல்கிறோம். அதே நேரத்தில் மக்களிற் பலபேரும் சித்திரைவதைக்கும், தண்டனைக்கும், சொத்துக்களை இழந்தும், மானத்தை இழந்தும், இருக்க இடம் இன்றியும், உடுக்க உடை இன்றியும், உண்ண உணவு இன்றியும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இப்படி வரிசையில் அடுக்கிக்கொண்டே போகலாம். இந்த மக்கள் எதிர்நோக்கும் பல இன்னல்களை சகிக்க முடியாத அக்காமார்கள் அண்ணமார்கள், தம்பிமார்கள், தங்கைமார்கள் தமது மக்களுக்காக ஒரு சுதந்திரமான தாய்நாட்டை மீட்பதற்காக போராடச் சென்று விட்டார்கள். இன்னும் செல்லவும் போகிறார்கள். முழுவதற்கும் காரணம் இனவெறி கொண்ட சிறீலங்கா இராணுவமே என திட்டவட்டமாகக் கூறமுடியும்.

சொந்த தாயநாட்டை மீட்பதற்கு நிச்சயம் போராட வேண்டும். ஆனால் தமக்குள்ள பொறுப்புக்களையும் உணரவேண்டும். குடும்பத்தில் உள்ள மூத்த மகனுக்கு தந்தை இறந்ததும் பொறுப்புக்கள் அவன் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அவனுடன் சேர்ந்து பிறந்த சகோதரிகளுககும், சகோதரர்களுககும் நல்லவாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதும் வழிநடத்திச் செல்வதும் அவர் பொறுப்பு ஆகும். அந்த அண்ணவே தனது சகோதரங்களை முற்றாக தோளிலே சுமக்கிறார் என கூறமுடியும், அந்த பெண்களை நல்ல ஒருவன் கையில் கொடுப்பதற்கு நன்றாக கஷ்டப்பட்டு பணம் சேகரித்து சீதனமாக கொடுக்க வேண்டும். தந்தை இருந்தாலும் அந்த அண்ணவுககே குடும்பப்பொறுப்பு ஆகும். ஆண் குலம் பெண்குலத்தை தமக்கு வாழ்க்கைத் துணைவியாக ஏற்கும்போது சீதனம் கேட்காவிடின். சீதனம் கொடுக்கவும் தேவையில்லை. அதாவது சீதனம் வேண்டாம். பெண்ணை மட்டும் கேட்டுக்கொண்டால் என்ன இப்பிரச்சனை? அந்த அண்ண சென்றால் குடும்பபொறுப்பை யார் பார்ப்பது? "குடும்பப் பொறுப்பை உதறித்தள்ளிவிட்டு நாட்டுக்காகப் போராட முன்வருவது பைத்தியக்காரத்தனமானது" உண்மையில் இந்நிலைமையில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கொள்கின்ற இன்னல்களை கஷ்ரங்களை கண்கொண்டு கூட பார்க்கமுடியவில்லை. இதைவிட சிறுதம்பியர்கள் உள்ள அண்ண சென்றால் அவர்கள் தமது எண்ணப்படி திரிந்து தீய செயல்களிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு மக்களுக்கும், சமூகத்துக்கும் உதவமுடியாத நிலைமை உருவாகும் என்னைப்பொறுத்தமட்டில் குடும்பப்பொறுப்பை உதறித்தள்ளிவிட்டு நாட்டுக்காக போராட முன்வருவது உண்மையிலே பைத்தியக்காரத் தனமானது. எனவே இக்கூற்று உண்மையானது என முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன்.

வி.ரஞ்சினி

## (3)

இது கடந்த தை, மாசி பங்குனி மாதத்திற்குரிய சுதந்திரப்பறவைகள் இதழில் வெளியாகிய ஓர் கருத்து. இங்கு முதலில் ஆராயவேண்டியது என்னவெனில் போராடப் றப்படுவதென்பது ஓர் மடைமைத்தனமான செயல் என கருதப்படுகிறது. போராட்டம் என்பது ஓர் நியதி இது இயற்கையானது. அறிஞர் அண்ணதுரையின் கருத்துப்படி போராட்டம் என்பது ஓர் வற்றாத நதி. ஒடுக்குமுறை அதன் வாயிலை பெருப்பிக்குமே யொழிய சிறுப்பிக்காது. போராட்டத்தை முன்னெடுப்பது என்பதை ஒரு போதும் மடைமைத் தனமான செயல் என்பதனை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆனால் ஓர் போராட்டமானது சாதாரண ஓர்மனிதனால் ஆரம்பிக்கப்பட முடியும். தொடர்ந்து முன்னெடுக்கப் படுவதென்பது சாதாரண ஓர் மனிதனால் இலகுவான காரியமாகாது ஆனால் கூட்டமாக முன்னெடுத்து நடத்தப்படும் போராட்டம் நிச்சயம் வெற்றியில் முடிவடைய வேண்டும். தனிமரம் தோப்பாகாது. ஆனால் தோப்பாவதற்கு உதவி செய்யும். எனவே எந்த வகையிலும் ஓர் போராட்டம் ஒன்றை நிகழ்த்தப் புறப்படுதலென்பது மடைமைத்தனமான செயல் என்பதை என்னால் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாது. முற்போக்கு சிந்தனையுடன் ஆரம்பிக்கும் எந்த ஓர் போராட்டமும் தோல்வியை தழுவ முடியாது. மககளால் நிச்சயமாக ஏதோ ஓர் கட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டாக வேண்டும்.

அடுத்து நாட்டுக்காக போராடப் புறப்படுவதென்னும் போது இங்கு ஓர் சாதாரண மனிதனுள் எழும் சுயநலம், பொதுநலம் எனும் இரண்டு கருத்து மோதல்களில் விளைவில் பொதுநலம் வெற்றி பெற்ற சந்தர்ப்பத்தில் ஒருவன் நாட்டுக்காகப் போராடப்புறப்பட முன்வருவான். சுயநலம், பொதுநலம் மோதல்களில் எந்த ஓர் சந்தர்ப்பத்திலும், சுயநலம்கருதாது பொதுநலத்துடன் ஒருவன் நடந்து கொள்ள முற்படுவது வரவேற்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். எனவே எந்த வகையில் பார்த்தாலும் நாட்டுக்காகப் போராடப்புறப்படுவது என்பது சகலராலும் அங்கீகரிக்கப்பட வேண்டுமேயொழிய எடுத்தெறிந்து விட முடியாததொன்று.

மேலும் இங்கு பொதுநலம் கருதாது சுயநலமாக வெற்றி பெறும் பட்சத்தில் ஓர் சாதாரண மனிதன் தனது குடும்பத்திற்காகப்போராட வேண்டியிருக்கும் ஏனெனில் வாழ்க்கை என்பதும் ஒருவகைப்போராட்டமே. எனவே எந்த வகையாகப்பார்த்தாலும் கூட போராடப்புறப்படுவது போராட்டம் நடத்துவது என்பது ஓர் மடைமைத்தனமான செயல் அல்ல.

மேலும் அடுத்து பொறுப்பை உதறித்தள்ளி போராடப்புறப்படுவதென்பதாகும். இக் கருத்துதான் சற்றேனும் ஏற்றுக் கொள்ள முடியாத தொன்று. ஏனெனில் ஒருவன் எந்த வகையிலும் பொறுப்பற்று நடந்து கொள்வானாகில் அவனின் செயற்பாடுகள் சமுதாயத்தில் அங்கீகரிக்க முடியாது. எனவே ஒருவன் குடும்பத்திற்காக போராடுவதாகிலும் சரி நாட்டிற் காக போராடுவதாகிலும் சரி எச்சந்தர்ப்பத்திலும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்வது அவசியமானது ஒன்றாகும். எனவே பொறுப்பை உதறித் தள்ளிவிட்டு போராடப் புறப்படக் கூடாது புறப்படமுடியாது.

அடுத்து நோக்கும் கட்டமாக குடும்பப் பொறுப்பை உதறித்தள்ளி நாட்டுக்காக போரா ராட முன்வருதல் என்பதாகும். நாட்டுக்காக போராட முன்வரும் ஒருவன் குடும்பப் பொறுப்பை உதறிவிட்டான் என்பதை முழுவதாக ஏற்றுக் கொள்ளமுடியாது. நாட்டுக்காக போராட முன்வரும் ஒருவனால் குடும்பப்பொறுப்பை உததறித்ள்ள முடியாத நிலையிலும் நாட்டுக்காக போராட முற்படுவதும் நமது அன்றாட வாழ்க்கையில் அவதானிக்கக் கூடிய நிகழ்ச்சிகளாகும். நாட்டுக்காகப் போராட முன்வரும் ஒருவனால் குடும்பப் பொறுப்பை உத றித்தள்ள முடியாத நிலை காணப்படும் சந்தர்ப்பங்களில் அம்மனிதன் நாட்டிற்கான போராட்டத்தில் பூரண பங்களிப்பு செய்யமுடியாத ஓர் நிலையை உருவாக்கும். எனவே அம்மனிதனது பங்களிப்பின் அளவு குறைந்தளவில் காணப்படும். குடும்பப் பொறுப்பை உதறமுடியாத நிலையிலும் அம்மனிதன் நாட்டிற்காக போராட முன்வரும் போது குடும்பத் தில் ஏற்படும் நெருக்கடிகளை விட நாட்டில் அவனுக்கு தனியாக ஏற்படும் நெருக்கடிகள் அதிகமாயிருக்கும். இச்சந்தர்ப்பத்தில் குடும்பப் பொறுப்பிலிருந்து அம்மனிதன் இயல்பாக விடுபட்டு நாட்டிற்கான போராட்டத்தில் பங்கு பற்றவேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறான் இச்சந்தர்ப்பத்தில் குடும்பப் பொறுப்பை உதறித்தள்ளுகிறான் என்றோ உதறித் தள்ளி விட்டான் என்பதையோ ஏற்றுக் கொள்ளமுடியாது.

முழுமையாக நோக்கும் பட்சத்தில் ஏதோ ஓர் வகையில் ஒருவன் தனது தனிமனித சுதந்திரத்திற்காக குடும்பத்திலும், தன் இனத்தின் அல்லது வர்க்கத்தின் சுதந்திரத்திற்காக நாட்டிலும் நாளாந்தம் போராட்டம் நடத்த வேண்டியிருக்கும். போராட்டம் என்பது சுதந்தி ரம் பறிபோகும் சந்தர்ப்பத்தில் இயல்பாக ஆரம்பிக்கும் சுதந்திரம் பறிக்கப்பட்டு, ஒடுக்கு முறை அதிகரிக்கப்படும் பட்சத்தில் போராட்டம் வளர்ச்சியடையும் போராட்டத்தின் வெற் றியும், தோல்வியும் ஒடுக்கப்படும் வர்க்கம் அல்லது இனத்தின் ஒற்றுமையில் தங்கியிருக் கக் காணப்படும்.

வெற்றி அல்லது தோல்வியைக் கருத்திற் கொள்ளாது போராட்டம் ஆரம்பிக்கப் படும். ஆனால் எமக்கு உள்ள பொறுப்பினை உணரும் பட்சத்தில் தான் போராட்டம் வெற்றி யடையக் காரணம் பொறுப்பை உதறித்தள்ளி விட்டு ஆரம்பிக்கப்படும் எத்தகைய போராட்டமும் எச்சந்தர்ப்பத்திலும் வெற்றியடைய முடியாது. அது மடைத்தனமானதும் கூடத்தான். ஆனால் பொது நோக்குடன் நாட்டிற்காக ஆரம்பிக்கப்படும் போராட்டம் பொறுப்பற்றது ஒன்று அல்ல. அது தேவையானது இச்சந்தர்ப்பத்தில் தவிர்க்க முடியா காரணங்களுக்காக குடும்பப் பொறுப்பை கருத்திற் கொள்ளவோ உதறிதள்ளவோ மு யாத ஓர் இக்கட்டான நிலையில் தனிமனிதனுள் ஓர் தனிமனித போராட்டம் உருவெடுக் கும். இதன் விளைவில் நாட்டிற்கான போராட்டம் ஆரம்பமாகும். இச்சந்தர்ப்பத்தில் குடும்பப்

பொறுப்பை உதறித்தள்ளுவது மடைத்தனமானது ஒன்று என்று கூறமுடியாது. மேற்படி தனிமனித போராட்டத்தின் வெற்றியையும் தோல்வியையும் நாட்டிலும், அவனது குடும்பத்திலும் காணப்படும் தனிமனித நெருக்கடிகளின் அளவில் தங்கியுள்ளது எனலாம். எந்த கண்ணோட்டத்துடன் பார்த்தாலும், குடும்பப் பொறுப்பை உதறித்தள்ளிவிட்டு நாட்டுக்காகப் போராடப் புறப்படுவது என்பது மடைமைத்தனமானது என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் சந்தர்ப்பம் காரணமாக குடும்பப் பொறுப்பை உதறித்தள்ளி நாட்டுக்காகப் போராடுவதென்பது தவிர்க்கப்பட முடியாத தொன்றாகிறது. இந்நிலையில் குடும்பப் பொறுப்பை உதறித்தள்ளுவது மடைமைத்தனமானது ஒன்று அல்ல.

-ஆரபி-

## (4)

எமது நாட்டில் உள்ள குடும்பங்களில் உள்ள ஒவ்வொருவரும் எமது சமூகத்தின் அங்கத்தவர்களே. ஆகையால் எமது சமூகத்தில் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் பங்கேற்க வேண்டியபொறுப்பு அவர்களுக்கு உண்டு. குடும்பங்களில் காணப்படும் அடிப்படைப் பிரச்சனையாகிய பொருளாதாரப் பிரச்சனையானது அனைத்து குடும்பங்களிலும் காணப்படுவதால் அதனை சமூகப் பிரச்சனையாக நோக்குவதை விட்டு தனித்து ஒவ்வொரு குடும்பத்திற்குமுரிய பிரச்சனையால்நோக்குவது தவறாகும். இதனை ஒவ்வொருவரும் தமது சொந்தக்குடும்பப் பிரச்சனையாக மட்டும் யோசிப்போமாயின் ஒரு போதும் இப் பிரச்சனைக்கான நிரந்தரத் தீர்வைக் காணமுடியாது நாம் போராடுவது எமது சமூகத்தின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான போராட்டமே தவிர வெறுமனே நாட்டுக்காக அல்ல. சமூகத்திலுள்ள பிரச்சனைகளின் அடிப்படையை எளிதில் புரியக்கூடிய வகையில் தெளிவுபடுத்தி அதனைத் தீர்ப்பதற்காக நாம் மேற்கொள்ளும் வழிமுறையை மாற்றத்தை உருவாக்க முன்வரும் அமைப்புக்கள் முன்வைப்பதன் மூலம் இக்கருத்தின் அர்த்தமின்மையை தெளிவுபடுத்த வேண்டியது விடுதலை அமைப்புகளின் கடமையாகும். அத்துடன் போராளிகள் சிலரின் நடவடிக்கைகளில் காணப்படும் எளிமையின்மையும் கடின உழைப்பின்மையும் இக் கருத்தினை எம்மிடையே தோற்றுவிப்பதற்கானகாரணியாக அமைந்துள்ளது.

-சாந்தி-

## <u>தொடர்பு</u>

**செல்வி. ஜோகராணி**
3ம் வருடம்,
கலைப்பிரிவு,
யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

# பாட்டியைச் சந்திப்போம்

வேப்பமர நிழலில் மாலைப் பொழுதில் மங்கிய வெளிச்சத்தில் பாய் பின்னிக்கொண்டிருந்த பாட்டி பாய்ச்சுருளைப் பக்கத்தில் போட்டுவிட்டு மடியிற் குள்ளிருந்து வெத்திலையை எடுத்து உரலில் போட்டு இடித்தவாறே, முன்னுல் இருந்த பனைக்கூடலிற்கிடையாக பாட்டியிருக்கும் திடலுக்கு வந்தேறும் ஒற்றையடிப்பாதையை நோக்கிஞர் பாட்டி. இரண்டு பெண் பிள்ளைகள் வருகிறுர்கள். பாட்டிக்கு ஆட்களைத் தெரியவில்லை இருப்பினும் தனது பேத்தி இராசாத்தியினுடைய சினேகிதப் பிள்ளைகள்தான் என்பது புரிந்து விட்டது.

**பாட்டி:-** வாருங்கோ மோனே வாருங்கோ! கொஞ்சம் முன்னே வேட்டுக்கள் தீர்ந்து கேட்கேயில்லையே. சுத்திச் சுழண்டு ஆறுதலாவாறியள் எப்பன் கெதியாவாங்கோவன் - - - - - - -

பிள்ளைகள் பாட்டியை நெருங்கியபோது

**பாட்டி:-** ஆர் பிள்ளையள் மதியும் மாலாவுமே?

**பிள்ளைகள்:-** இல்லையாச்சி நாங்கள் தாரிணியும் உஷாவும்.

**பாட்டி:-** ஆங் - - - ஆங்க் - - - இவள் எங்கடை பாக்கியத்தின்ரையும் இரத்தினத்தின்ரையுமே - பொழுது இருட்டிப் போட்டுதெல்லே - இந்தப் புகைச்சல் கண்ணுக்கு மட்டுத்திட்டம் தெரியேல்லை. - இவள் என்ரைபேத்தியிட்டையை வந்தனீங்கள். - அவளின்னும் வரயில்லைப் பிள்ளை. ஏதும் சொல்ல வேணுமே - அப்பிடியெண்டால் சொல்லுங்கோவன் வரவிட்டுச் சொல்லுறன்.

**பிள்ளைகள்:-** (இரகசியமாக -) இந்தக் கிழடு விடுகுதில்லை - விஷயத்தைச் சொல்லி இந்தப் புத்தகங்களைக் கொடுத்தால் மனுசி எரிச்சுக் கிரிச்சுப் போடுதோ தெரியாது.

**பாட்டி:-** எனக்குக் கண்தான் புகைச்சல் காது நல்லாக் கேட்கும் மேனை - ஏதோ புத்தகம் வாங்கிப் படிச்சனீங்களே, குடுக்கப் போறியளே தாங்கோ மேனை அவள் பேத்திவரக் கவனமாக் குடுக்கிறன்; நீங்கள் பயப்பிடாதேங்கோ எனக்கெல்லாம் தெரியும். இவள் பேத்தியும் இரவு இரவா பன்னிரண்டொரு மணிமட்டும் உதுகளைத்தானே படிக்கிறவ

**பிள்ளைகள்:-** என்ன புத்தகம் படிக்கிறவ?

**பாட்டி:-** இந்த ஜே. ஆர். அச்சுலக்கை அரசாங்கம் இவன் எங்கடை பொடியளின்ரை சண்டை - கொறில்லாச் சண்டை அந்தப் புத்தகங்கள்தான்

- காலமையும் "ரெலிக் கப்பல்" சுத்திஞன் - சாப்பாடு கொண்டு வந்தவஞம் - பொடியள் இறங்க விடேல்லையாம் - அந்தக் குஞ்சுகள் ஊருக்காக உயிரை விடுறதை இங்கையார் கணக்கிலெடுக்கினம் நேற்றும் பருத்துறையில் இரண்டாம். இவளென்ரை பேத்தி சொன்னுள். இங்கே சனம் தங்கடை பிள்ளையளை வெளிநாட்டுக் கெல்ல துரத்துதுகள். மிச்சசொச்சம் கிடக்கிற காசு பணத்தையும் பொத்திப் பொத்தி வைச்சுக்கொண்டு நித்திரை வராமல் தவிக்கு துகள். அதுகள் அங்கே ஆமிக்காரங்களை அவங்கடை "காம்ப்" போடயே பொத்திப் பொத்திவைக்குதுகள் நித்திரை கொள்ளாமல் அதுகள் அவங்களை அடைச்சு வைச்சிருக்கேல்லையெண்டால் இண் டைக்கு இந்தக் களியாட்டங்களெல்லாம் நடக்குமோ? பாருங்கோ மோனை இவன் வெளிநாட்டாலே வந்த கக்கண்டன்ரை பொக்சுப் பெட்டி என்ன சத்தமாப்படிக்குதெண்டு. உந்தப் பிள்ளையாருக்குப் பின் ஞலை நிக்கிற அரசுக்குக் கீழே போய்ப்பார் பிள்ளை ஆர் இருக்கிற தெண்டு. பிள்ளையளை வெளியாலை அனுப்பிப் போட்டு அதுகள் கடுதா சிக் கூட்டம் விளையாடுதுகள் பொம்பர் வர ஆரும் வெட்டிவைச்ச கிடங்கிக்கை பறந்து வருவினம் இறங்கிறதுக்கு. அல்லாது போனுல் என்ன செய்வினம் - அங்கே 'ரெலிக்கப்பல்' டுர் டுர் எண்டு அடிக்க இஞ்சை மூட்டை முடிச்சைக் கட்டிக் கொண்டு புறப் பட்டு விடுவி னம் - இருக்கிறதுகளையும் பயங்காட்டிக் கூட்டிக் கொண்டு வேட் டைக்காரர் வெளிக்கிட்ட மாதிரி - ஏன்பிள்ளை - ஏன்பிள்ளை? இப்படி அழிவான்? கரணவாய்க்கு பொம்பர் வரமாட்டானே கரவெட்டிக்குப் பொம்பர் வரமாட்டானே - அதுக்குத்தானே பொடியள் சொல்லு கிறுர்கள் கிடங்குகளை வெட்டுங்கோ அதுக்குள்ளே பாதுகாப்பாக இருங்கோ என்று - நேற்று இராத்திரி ரிவிபெட்டியிலும் போட்டுக் காட்டிஞங்களாம்.

**பிள்ளைகள்:-** ஒமாச்சி நீங்கள் சொல்லுறது சரிதான் நிலவுக் கஞ்சிப் பரதேசம் போன கதைதான் எங்கடை சனத்தின்ரை கதை.

**பாட்டி:-** இந்த பொம்பர் பிள்ளை கண்ணை வெட்டி முளிக்கிறதுக்கிடையில் கிழக்கிலேயிருந்து மேற்கே போவான் வடக்கே இருந்து தெற்காக போவான் - குத்துக்கறணம் அடிப்பான். அவன் காலங்காட்டிஞன் என்டப் பிறகு இங்கையுள்ள அடங்காத குஞ்சுகள் அண்ணுந்து பாக்குதுகள் அதை. அண்ணுந்து பாக்கிறது பிழை பிழை எண்டு எத்தனை தரம் பொடியள் சொல்லுறுங்கள் கேக்குதுகளே கணத்துக்குக் கணம் இடம்மாறுவான் - ஒண்டுநடந்த பிறகுதான் தெரியும் எல்லாம்

**பிள்ளைகள்:-** ஆச்சி பொடியள், பொடியள் எண்டு நீங்கள் இவ்வளவு கதைக் கிறியள் - சனம் உங்கே என்ன கதைக்குதுகள் தெரியுமே பதவி, ஆசையாலே தங்களுக்கை தாங்கள் அடிபட்டுச் சாகிறுங்கள்; இவங் களே போராடப் போகிறுர்கள்; ஈழமெடுக்கப் போறுங்கள் எண்டு

பேசுதுகள்.

**பாட்டி:** பிள்ளை நெல்லோடை பதரும் இருக்கும் காற்றுள்ள போதே தூற்ற வேணும் - எல்லோரும் பதவி ஆசைக்காரங்களில்லை: மக்களைக் காப்பாற்றுறதுக்கு உயிரைக் குடுக்கிறதுகள் உத்தமன்கள் அவங்களில் ஒருத்தன் சாகிறது, எங்கடை பிள்ளை குட்டி, புருஷன் சாகிறதிலொண்டாக எங்களைத் துக்கப்படுத்துது மோனை, ஆனால் பதவி, போகத்துக்கு ஆசைப்பட்டவங்களை நினைச்சு எங்கடை கண் துளி நீர்சிந்தாது மோனை. கட்டப்பொம்மன் வெள்ளைக்காரனிட்டைத் தோற்றதுக்கும் தூக்கிலதொங்கினதுக்கும் எட்டப்பன் உயிரோடை இருந்தது. பண்டார வன்னியன் மடியிறதுக்குக் காரணமென்ன காக்காய் வன்னியன் உயிரோடை இருந்தது. இப்பிடிக் காட்டிக் குடுக்கிற கைக்கூலிக் கூட்டத்தாலே தான் எத்தனையோ அரசுகள் பறிபோய் இருக்குது. அழிஞ்சிருக்குது எண்ட கதை தெரிஞ்சும் கண்ணைமூடிக் கொண்டு இருக்கிறது சரியே மோனை:

**பிள்ளைகள்:-** நல்லா இருட்டிப் போய்ச்சுது ஆச்சி நாங்கள் வரப்போறம் இந்தப் புத்தகங்களை அவவிட்டை குடுங்கோ.

**பாட்டி:-** உதில் தானேவீடு - உந்தத் தோட்டம் கழியவருகுது தானே இரண்டு பேர் நிக்கிறியள் என்னபயம் கொண்டு வந்து விட்டுக் கேய்.

**பிள்ளைகள்:-** வேண்டாமாச்சி நாங்கள் போவம் - போட்டு இன்னொரு நாளைக்கு வாறம்.

**கோழைத்தனத்திற்கும் வன்முறைக்கும் மத்தியில் ஓர் தெரிவு இருக்குமானால் நான் வன்முறையையே ஆதரிப்பேன். ஓர் இனம் முற்றாக நசுக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டிருப்பதை விட நான் ஆயிரம் தடவைகள் வன்முறையையே விரும்புவேன். அவமானத்தின் இழிவான சாட்சியாக இருப்பதை விட கௌரவத்தை காப்பாற்ற நான் ஆயுத மேந்தவும் தயார்.**

**மகாத்மா காந்தி**

# தலைவணங்குகிறோம்

## ஈழநாடு (27-6-86) தரும் செய்தி:-

முஸ்லிம்களின் கண்டன ஊர்வலம்:-

யாழ் முஸ்லிம் பகுதியில் நடந்த படுகொலைச் சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்து யாழ். முஸ்லிம் பகுதியில் சுலோக அட்டைகளைத் தாங்கியவண்ணம் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் நீண்ட ஊர்வலமொன்றை நடாத்தினர்கள்

உண்மைக்கு மாருன வானொலிச் செய்தி:-

''பிரேத அடக்கமொன்றில் கலந்துவிட்டுத் திரும்புகையில் நான்கு முஸ்லிம்கள், தமிழ்த் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர்' என்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்றுக்காலை அதன் செய்தி ஒளிபரப்பில் வெளியிட்ட தகவல் உண்மைக்கு மாருனது'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னுள் யாழ்மாநகரசபை உறுப்பினரும் ஒஸ்மானியாக்கல்லூரி உப அதிபருமான ஜனுப். க. மு ஹமீட் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும்தெரிவித்ததாவது யாழ்குடா நாட்டிலுள்ள முஸ்லிம்களின் ஏனைய சமூகத்தவருடனுன ஒற்றுமையைக் குலைக்கச் செய்வதாகவே அவ்வானொலித் தகவல் காணப்படுகின்றது. ஒரு தாய் மக்களாக வாழும் யாழ் முஸ்லிம் தமிழ்மக்களின் உறவுக்கு குந்தகம் விளைவிப்பதாக உள்ளது. எனவே தமிழ்த் தீவிரவாதிகளின் துப்பாக்கிகளின் துப்பாக்கிப் பிரயோகத்தில் யாழ் முஸ்லிம்கள் நால்வர் கொல்லப்பட்டனர் என்ற செய்தி உண்மைக்கு மாருனதாகும்.

## உதயனிலிருந்து (27-6- 86)

முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்:-

ஊர்வலத்தில் பல சுலோகங்கள் ஒலிக்கப்பட்டதுடன் பல சுலோக அட்டைகளும் பலரால் ஏந்திச் செல்லப்பட்டன.

'குற்றவாளிகளை மக்கள் முன்நிறுத்து'

'இன்று எம்மக்களுக்கு நாளை யாருக்கு'

'குற்றவாளிகளுக்கு மரணம்தான் தண்டனை'

'சி. ஐ. ஏ சதியை முறியடிப்போம்

'தமிழ்மக்களும் முஸ்லிம்களும் சகோதரர்களே.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முறியடிக்க பலவழிகளாலும் முயன்றுகொண்டிருக்கும் சிறீலங்கா அரசுக்கு கைக்கூலிகளாக இயங்குபவர்கள் தம் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக தண்டனையிலிருந்து தப்பிவிட வேண்டும் என்று கருதாமல் தமிழ் முஸ்லிம் ஐக்கியத்தை குலைத்து விடுதலைப் போராட்டத்தை திசைதிருப்ப முயன்றவர்கள் கடும் தண்டனை பெற்றே ஆகவேண்டும் என்ற உறுதியுடன் இருக்கும் முஸ்லிம் மக்களின் நிலையையிட்டு நாம் மகிழ்ச்சி அடைவது மட்டுமல்லாமல் அவர்களின் உறுதியான நிலைப்பாட்டுக்கு தலைவணங்குகிறோம். இந்த மக்கள் சக்தியின் முன்னுல் நிச்சயமாக எந்தபிற்போக்கு சக்திகளினதும் போலி வேடங்கள் கலைந்தே ஆகும். தமிழ் மக்களிடையே சிலர் தங்கள் சுயநலமே பெரிதாக வாழ்கிறுர்கள். 'விடுதலைப் போராட்டமே அர்த்தமற்றது', 'விடிவாவது வருவதாவது. என்று விதண்டாவாதம் செய்து கொண்டு நம்பிக்கையின்மையை, விரக்தியை மக்களிடையே ஏற்படுத்தி வீண் பொழுது போகிக்கொண்டிருக்கிறுர்கள். இவர்களைப் பொறுத்தவரையில் விடுதலைப் போராட்டம்விளையாட்டு அரங்கில் நடைபெறும் ஓர் விளையாட்டு இவர்கள் பார்வையாளர்கள். பங்காளராக வேண்டும் நினைப்பே இல்லாதவர்கள், கடமை உணர்வு இல்லாத இவர்கள் போன்றோர் இந்த முஸ்லிம் மக்களைப் பார்த்து இனியாவது திருந்தட்டும். எத்துணை பாடுபட்டாலும் சிறீலங்கா தமிழ் முஸ்லிம் ஐக்கியத்தை குலைக்க முடியாது என்பதனை திட்டவட்டமாக உணர்த்திவிட்ட முஸ்லிம்மக்களை சகோதரர்களாகப் பெற்ற நாம் விடுதலைப் போராட்டத்தை இவர்களின் பலத்தோடு மேலும் முன்னெடுப்போம்.

1976ஆம் ஆண்டு ஆனிமாதம் 16ம் திகதி தென்னுபிரிக்காவில் பிரிட்டோரியா அரசின் மிருகத்தனம் அப்பட்டமாக வெளிப் படுத்தப்பட்ட நாள். பத்தாவது நினைவு தினத்தையொட்டி 16. 6. 1986 ல் அங்கு நாடு தழுவிய ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் கண் டனக் கூட்டங்களும் இடம்பெற்றதுடன்பல உலகநாடுகள் பிரிட்டோரியா அரசுக்கு எதி ரான தமது பலத்த கண்டனங்களையும் தெரி வித்துள்ளன. 'சுவேட்டோ' படுகொலையை நினைவுகூறும் வகையில்மேற்குலகநாடுகளிலும் பலத்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடந்தன.

**பத்தாண்டுகளுக்கு முன் நடந்தது- - -**

ஆபிரிக்கான் மொழி கட்டாய அமுல்படுத் தலை எதிர்த்து அமைதி ஊர்வலம் சென்ற 350 பள்ளி மாணவர்கள் பிரிட்டோரியா அர சினுல் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இதன் பின் இக் கொலையைக் கண்டித்து ஊர்வலம் சென்ற ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர் கள், பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

*அரக்கத்தனத்தின் கால்களினுல்*
*இரக்கமின்றி மிதிக்கப்பட்டு*
*அழிக்கப்பட்டன*
*இளந்தளிர்கள்.*

*வெட்ட வெட்டத் தளிர்கள்*
*துளிர்க்கும்*
*உண்மை இது புரியாமல்*
*ஒடுக்கி அழிப்பவர்களை*
*என்னவென்று சொல்லிடு*
*வோம்.*

பூண்டுலோயா பொலிஸ் நிலையம் முற்றுகை: 500தோட்டத் தொழிலாளர் கைதான 12பேரை மீட்டனர். 35வீடு, 28கடைகள் தீக்கிரை.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக பூண்டுலோயா பொலிசாரினுல் கைது செய்யப்பட்ட12மலையக தமிழ் இளை ஞர்களை உடன் விடுதலை செய்யுமாறு சுமார் ஐந்நூறு தோட்டத்தொழிலாளர் கள் தடிகள், கற்களுடன் பொலிஸ் நிலையம் முன்பாகச் சென்று செய்த ஆர்ப்பாட்டத்தையடுத்து அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

4- 7 - 86 ஈழநாடு

**துணிந்து எழுந்துவிட்டால்:-**

**பணிந்து பணிந்து வாழ்ந்து**
**பட்ட கஷ்டம் போதுமென்று**
**துணிந்து எழுந்து விட்ட**
**தொழிலாளர் தீரம் கண்டேனும்**
**தனது தனது என்று இங்கும்**
**தனக்கென்றே வாழும் சிலர்**
**இனியேனும் தள்ளி நின்று**
**வேடிக்கை பார்ப்பதை விட்டொ**
**ழித்து**
**ஒன்றிணைந்து போராட முன் வந்தால்**
**அடிமை விலங்குகள் உடைந்தே**
**ஆகும்**
**இனிய சுதந்திரம் கிடைத்தே தீரும்.**

# வேஷங்கள் கலைக்கப்பட்டால்

-கமலி-

தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றியை நோக்கி சென்றுகொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் தமிழீழம் தேவைதானு என்ற விரகதியான ஓர் மனநிலை விடுதலையை நேசிக்கும் மககளிடம் ஏற்பட்டு வருகிறது. மரணங்கள், துயரங்கள், இராணுவ அட்டூழியங்கள் தான் இப்படியான மனோநிலைக்கு இவர்களைத் தள்ளுகிறதா என்றால் நிச்சயமாக இல்லை. தமிழீழத்து மக்கள் சிலரின் செயற்பாடுகள் தான் இப்படி அவர்களை நினைக்கத் தூண்டுகிறது. விடுதலையை தேசிப்போர் இத்தமிழீழ மக்களில் பலர். அடுத்தவன் எப்படி இருந்தாலென்ன. நாட்டில் என்னதான் நடந்தாலென்ன, 'நான் வாழ்ந்தால் போதும் என் குடும்பத்திற்கு எந்தக் கஷ்டமும் வ ரா ம ல் இருந்தால் போதும் என்று தன்னைச்சுற்றி ஓர் குறுகிய வட்டத்தைப் போட்டு அ த ற் கு ள் வாழ்ந்து கொண்டிருக்கும் சுயநலம பிடித்தோர் சிலர். ஆனால் இந்த சிலர் தங்கள் வசதிகளை மேலும் அதிகரிக்க வேண்டும் என்பதற்காக அந்த பலருள் சிலரின் மனதில நச்சுவிதைகளை விதைத்து விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்க முயற்சிக்கக் கூடியவர்கள்.

விடுதலைப் போராளிகள் தம் உயிரைத் துச்சமாக மதித்து போராடிக் கொண்டிருக்கிருர்கள. யாருக்காக அவர்கள் தங்கள் சுகத்தையெல்லாம் துறந்து, கஷ்டப்பட்டு போராடிச்சொண்டிருக்கிருர்கள். தாம் வளமாக வாழவேண்டும் எனபதற்காகவா? எந்தக்கணமும் தம் உயிருக்கு ஆபத்து வரலாம் என்பது தெரிந்துகொண்டு போராடுகின்ருர்களென்ருல் யாருக்காக? தமக்காகவோ? இல்லவே இல்லை. எமது மக்கள் தொடர்ந்தும் அடிமை வாழ்வு வாழவேண்டாம் என்பதற்காகத் தானே. இதனை ஏன் மக்களில் சிலர் புரிந்து கொள்கின்ருர்களில்லை, வெளிநாட்டுக்குப் போக பணவசதியில்லாமல தான் இளைஞர்கள் விடுதலை ஸ்தாபனங்களில் சேருகின்ருர்கள் என்று கிண்டல்பேசி உண்மையான விடுதலைப் போராளிகளின் மனத்தைப் புண்படுத்துபவர்களும் விடுதலைப் போரட்டத்திற்காக பணம் கேட்கப் போனுல் எவ்வளவு மிக மிகக் குறைவாகக் கொடுக்கலாமோ அவ்வளவு சொற்பமாக கொடுத்துத் துரத்துபவர்களும் (பணவசதி படைத்தவர்கள்தான் கூடுதலாக அவ்வாறு செய்கிருர்கள்), ஏதாவது ஒரு விடுதலை ஸ்தாபனத்தின் பெயரைச்சொல்லி தாம் அதன் ஆதரவாளர்கள் என்று சொல்லிக்கொண்டு தம் காரியங்களைச் சாதித்துக் கொள்ள நினைக்கும்; சந்தர்ப்பவாதிகளும் இன்று மலிந்து காணப்படுகிருர்கள், போராட்ட காலத்திலேயே இப்படிப்பட்ட சுயநலவாதிகள்தான் நிறைந்து காணப்பட்டதாக சுதந்திரம் அடைந்த பின் இவர்களின் செயற்பாடுகள் எப்படியிருக்கும் என்பதை நினைத்தே பார்க்கமுடியாது. கிடைக்கும் சுதந்திரம் பாதுகாக்கப்படுமா? கடுமையான போராட்டத்தினல் பெறப்படும தமிழீழம் இவர்கள போன்ருரால் சிதைக்கப்பட்டு விடுமா? விடுதலை கிடைத்தே ஆகவேண்டும என்ற விடாப்பிடியுடன் இருக்கும் தமிழீழ மக்கள் ஒவ்வொருவரும இந்த சுயநலவாதிகளை இனங்கண்டு அன்னியப்படுத்தி தனிமைப்படுத்த வேண்டும், கஷ்டப்பட்டு உழைத்து சேர்த்த பணமென்ருல் கஷ்டங்கள் தீரவேண்டும், விடிவு கிடைத்தே ஆகவேண்டும் என்ற உறுதியுடன் பணத்தைத் தருவார்கள் ஆனுல் இந்த சுயநலவாதிகளின் ப ண மோ உழைப்பாளிகளைச் சுரண்டிச் சேர்த்த பணம் அதனுல் அதனை இழப்பது இவர்களுக்கு கஷ்டமாகத்தான் இருக்கிறது தனது பணம், தனது வீடு, தனது நகை என்று இவர்கள் பத்திரப்படுத்தி வைப்பவை பத்திரமாக இருக்கின்றதென்ருல் அதற்குக காரணம் இராணுவத்தினரை உள்ளே நடந்து வராமல் பனை அல்லும பகலும் கண்ணிற்குள் எண்ணெய் ஊற்றிக்கொண்டு உயிரைத் துச்சமாக மதித்து காவல் செய்யும் போராளிகள்தான் எனபதை ஒரு நொடிப்பொழுதாவது இவர்கள் நினைத்துப் பார்க்கவில்லை. இராணுவம் நடமாடும் இடமாக இருந்திருந்தால் இத்தனை பொருட்களையும் இவர்கள் பத்திரமாக

வைத்திருக்க முடியுமா? இராணுவத்தை நடமாடவிட்டு இவர்கள் போன்றோரையும் விடுதலை உணர்வுள்ளவர்களாக ஆக்கிய பின் போராட்டத்தை தொடர்ந்தால் தான் பெறப் போகும் தமிழீழம் முன்னேற்றப் பாதையில் செல்லக் கூடிய நாடாக உருவாகும் என்று எண்ண வைக்கக்கூடிய அளவுக்கு இந்த சுயநலவாதிகளின் செயற்பாடுகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன,

சிறீலங்கா அரசாங்கமோ தனது தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுக்கொண்டே வருகின்றது என்பதை அதனால் வெளியிடப்படும் பிரசுரங்களே தெளிவாக்குகின்றன, "உலகெங்கும் இருக்கும் மக்கள், ஈழப் பிரிவினைவாதிகளுக்கு உதவிகளை வழங்குகின்றனர். சுயநலம் மிக்க இவர்களுக்கு எல்லாவகையிலும் உதவவேண்டும் எனக் கோருங்கள்" என்று தமிழினத்தின் தோழன் என்ற பெயரில் யாழ்ப்பாண மக்களுக்கு எழுதிய பிரசுரம் கூறுகிறது. சர்வதேச அரங்கில் எமது விடுதலைப் போராட்டம் வலுவான அங்கீகாரத்தை பெற்றுவிடப் போகிறது என்ற பெயரில் அச்சம் தலைதூக்கியதால் அரசாங்கம் அவசர அவசரமாக இப்பிரசுரத்தை வெளியிடுகின்றதென்றால் அதற்குக் காரணம் அப்படியொரு நிலைக்கு இனவிடுதலைப் போராட்டத்தை வளர்த்தெடுத்துக்கொண்டு வரும் விடுதலைப் போராளிகளே, அவர்களின் உறுதிப்பாட்டைப் பற்றி அரசுக்கு விளங்கிய அளவுக்கு தமிழீழ மக்களில் சிலருக்கு விளங்கவில்லை, பாதிக்கப்பட்டுத்தான் விடுதலையைப் பற்றி மக்கள் சிந்திக்க வேண்டும் என்பதில்லை, இன்று விடுதலைக்காக போராடும் போராளிகள் எல்லோரும் பாதிக்கப்பட்டுத்தான் போராளிகளானார்கள் என்பதில்லை, அதனால் எல்லோரும் பாதிப்படைந்த பின்தான் போராட்டத்தில் பங்களிக்க வேண்டும் என்பதில்லை ஆனால் எங்கள் தமிழீழ மக்களில் சிலரோ பாதிப்படைந்தால் தான் எமக்கும் விடுதலை உணர்வு வரும் என்பதுபோல் நடக்கிறார்கள், மலையகமக்களின் தன்னம்பிக்கையும், ஒன்றுபட்டு செயலாற்றும் தன்மையும், தீரமும் தனது என்று நினைக்காமல் தமது என்று எண்ணித் துணிவுடன் போராடும் தன்மையும் தமிழீழ மக்கள் அனைவரிடமும் ஒருமித்து காணப்பட்டிருக்குமேயானால் எமது விடுதலை போராட்டம் எப்போதோ முக்கால் கிணறு தாண்டியிருக்கும் இன்றைக்கு இத்தனை தொகையாக மக்களோ போராளிகளோ இறந்திருக்கவேண்டிய அவசியமே இருந்திருக்காது, போராட்டத்தின போது மரணங்கள் தவிர்க்க முடியாதது, ஆனால் இவ்வளவு தொகையான மரணங்களுக்கு மக்கள் சிலரின் சுயநலப் போக்குகளும் தான் காரணம் இன்றைக்கு எமது நாட்டில் நிம்மதியாக இருக்க முடியாது என்று சொல்லிவிட்டு வெளிநாட்டுக்கு ஓடுவோரின் தொகை அதிகரித்துக் கொண்டு தான் வருகிறது, இவர்களை தடுத்து நிறுத்த வேண்டிய அவசியமேயில்லை, ஏனென்றால் இவர்கள் இந்நாட்டுக்கும் பயன்படப் போவதில்லை அந்த நாட்டுக்கும் பயன்படப்போவதில்லை குடும்பத்தில் நிலவும் பொருளாதாரக் கஷ்டங்கள் காரணமாக சிலர் வெளிநாட்டுக்கு போகவேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். ஆனால் அவர், கள் குறிப்பிட்ட காலத்திற்கு உழைத்துவிட்டு தம் நாட்டுக்கு திரும்ப நினைப்பவர்கள். அவர்கள் அவ்வாறு போவதற்கு இந்த சமூக அமைப்புத் தான் காரணம் அவர்களைப்பற்றி இங்கே நாம் எதுவும் கூறவரவில்லை, ஆனால் இங்கு வசதியோடு வாழ்ந்துகொண்டிருப்போர் பலர் வெளியில் போய் நிம்மதியாக உல்லாசமாக வாழவேண், டும் என்ற நினைப்போடு வெளிநாடு போகின்றார்கள், இவர்கள் போன்றோர் எதற்கும் லாயக்கற்றவர்கள், இவர்கள் இங்கிருந்தாலென்ன? போனால் என்ன.

உண்மையாக தூங்குபவர்களை எழுப்பலாம் ஆனால் தூங்குவது போல் நடிப்பவர்களை எழுப்ப முடியாது. நிம்மதியாக வாழப்போகின்றோம் என்று சொல்லிக்கொண்டு உல்லாச வாழ்க்கை வாழப் போகின்றவர்கள் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர்கள், இன்று தமிழீழத்தின் சிலபகுதிகளில் வாழும் சிலர் இந்த குணம்சங்கள் கொண்டவர்கள் இவர்கள் வெளியில் போகாமல் இங்கேயே வாழ்வார்கள் என்றால் தங்கள் தங்கள் சொத்து சுகங்களை இழந்துவிடாமல் இருக்கவேண்டும்

என்பதற்காக விடுதலைப் போராட்டத்தை நசுக்க முனையும் தீய சக்திகளோடு இணைந்து விடுவார் கள் அதைவிட இவர்கள் வெளியில் போவதே நல்லது எமது மண்ணில்தான் வாழவேண்டும். எமது விடிவுக்காக நாம்தான் போராட வேண் டும் என்று எண்ணுகின்ற எமது மக்கள் எப்போ தும் இங்குதான் போராடி மடிவார்கள்.

அந்த மக்கள் நிச்சயம் இங்கு இப்போது வாழ்ந்துகொண்டு விடுதலைப் போராட்டத்தை வர் ணித்துக்கொண்டும் போராளிகளைக் கீழ்த்தரமாக நினைத்துக்கொண்டும் கிண்டல் பேசிக்கொண்டும் தனக்குத்தனக்கென்று பொருள் சேர்க்க, இல் லாதார் வயிற்றிலடித்துக்கொண்டு, அப்படிப் பெற்ற பணத்தைப் பாதுகாக்க காசு பெறுமல் நிற்கக்கூடிய காவலாளிகளைத் தேடிக்கொண்டும் இருப்பவர்களை விடுதலையை வேண்டி நின்று அதற்காக பாடுபடும் எம்மக்கள் கண்டு பிடித்து அவர்கள் முகத் திரைகளைத் கிழித்தே ஆகவேண் டும். அவர்களின் வேஷங்கள் கலைக்கப்படாமல் நாட்கள் கடந்து கொண்டே இருக்கு மென் றால் எமது விடிவுக்கான நாளும் தூரப் போய்க் கொண்டே இருக்கும். ஆதலால் எமது மக்கள் இந்த சுயநலவாதிகளைக் கண்டறிந்து தனிமைப் படுத்த வேண்டும். தனியே நின்று அச் சுயநலவாதிகளால் எதுவுமே செய்து விட முடியாது.

# செய்திக் கோவை

**ஈழமுரசிலிருந்து:-**

*தாய் சுடப்பட்டது பற்றி மகன் மகேஸ்வரன் தகவல்.* நயினாதீவில் சீருடையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய நயினாதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த இராசம்மா பற்றி மகன் தகவல்.

5- 3- 86

கடந்த 25ம் திகதி மன்னாரில் நிகழ்ந்த கண்ணிவெடித் தாக்குதலின் பின் சீருடையினர் மேற்கொண்ட தாக்குதல்களினால் காயமடைந்த நான்கு முஸ்லிம் பெண்கள் மேலதிக சிகிச் சைக்காக நேற்று முன்தினம் யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். க, பதுர்நிஷா (12), ஆலா அந்தோனியா (84), கமால்பஷ்யா செய்த்தூன் (35), பாத்திமா பீபீ (14).

5- 3- 86

கன்னியாவிற்கு அருகேயுள்ள மாங்காயூற்று என்னும் கிராமத்திலிருந்து நேற்று முன் தினம் மீட்கப்பட்ட ஆறு சடலங்களும் திருமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. கைகள் தனித்தனியாகப் பின்புறம் கட்டப்பட்டு வாயில் துணி அடைக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட இச்சடலங்களில் சவரக்கத்தி வெட்டுக்காயங்களும் காணப்பட்டன. கிராக்கன் காளிமுத்து (51), அவரின் மனைவி நல்லம்மா (58), முத்தையா தவமணி ஆகியோரே வெட் டிக் கொல்லப்பட்டவர்கள்.

8- 3- 86

ல்லூரிலிருந்து இணுவில் வரையும் உலக பெண்கள் தின ஊர்வலம் 9- 3- 86

சர்வதேச பெண்கள் தினக்கூட்டத்தில் அறைகூவல். பெண்கள் பார்வையாளர்களாக இருக்கமுடியாது. இனி களத்தில் குதிக்க வேண்டும். 10- 3- 86

பறையனாலங்குளத்தில் புதிதாக முகாமிட்டுள்ள இராணுவத்தினர் கடந்த திங்கட் கிழமை அப்பகுதியிலுள்ள மூன்று இளம் பெண்களைக் கைதுசெய்து ஓரிரவு முகாமில் தடுத்து வைத்திருந்தனர். 11- 3- 86

வவுனியாவில் விமானக்குண்டுக்கு மூவர் பலி மூன்று பெண்கள் காயம். காயமடைந் தோர் கந்தசாமி செல்லமுத்து (65). மகேந்திரம் பாலாமணி (40), அவரது மகள் வினோதினி (13). 13- 3- 86

கடந்த புதன்கிழமை அயலூரான வல்வெட்டியில் நடைபெற்ற ஆகாயத் தாக்குதலின் போது பொம்பர்களிலிருந்து விழுந்த வெடிகுண்டுகளின் பயங்கர சத்தத்தினால் ஏக்கமடைந்த 62வயதுப் பெண்ணின் ஒருகாலும் கையும் செயலிழந்துவிட்டது. 17- 3- 86

மந்திகை கொள்ளையால் பெண்கள் வீதியில் மறியல். 18- 3- 86

ஊர்காவற்றுறை ஷெல் தாக்குதலால் பாலச்சந்திரன் இந்திரா (21) காயமடைந்தார். மட்டுநகரில் கல்லடிப்பாலம், அரசடிச்சந்தி, புகையிரதவீதிச்சந்தி, பஸ்நிலையச்சந்தி, ஆஸ் பத்திரிவீதிச்சந்தி ஆகியவற்றில் வைத்து ஆண்கள், பெண்கள், சிறுவர், வயோதிபர் என்ற வேறுபாடின்றி ஐநூறுபேர் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டனர். 21- 3- 86

நெடுங்கேணியில சரமாரிச்சூடு. சடலங்கள் ரத்த வெள்ளததில் கொலலப்பட்டோரில் பெண்ணும ஒருவர். 21- 3- 86

யாழ்ப்பாணம், கோட்டை, தொண்டமனாறு, நாவற்குழி, ஆகிய இடங்களிலுள்ள ராணுவமுகாம்களிலிருந்தும் காரைநகர் கடற்படை முகாமிலிருந்தும் நேற்று அதிகாலை முதல் நண் பகல்வரை அடுத்தடுத்து தொடர்ச்சியாக நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களால் சுமார் நாற் பது பேர் காயமடைந்தனர். பல வீடுகள் சேதமடைந்தன. பிரேமலதா (20) என்பவரும், ரகு சிவகுமார் (11/2) என்பவரும் கொட்டடியில் துடிதுடித்துப் பலியானார்கள். 22- 3- 86

முல்லைத்தீவு ஆஸ்பத்திரி அருகே நடந்த மோட்டார் தாக்குதலில் தபாற்பகுதி ஊழி யரான மயில்வாகனம் கனகசூரியர் (43) இவரது மனைவியின் சகோதரியான பத்மாவதி சோமநாதன் (32) ஆகிய இருவரும் படுகாயத்துடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட் டுள்ளனர். சோமநாதன் விஜயநாதன் (28), ஜெயந்தி சோமநாதன் (22) ஆகியோர் முல்லைத் தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 53- 3 86

பருத்தித்துறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்திற்கு கும்பிடச்சென்ற செல்வி. அ. நாகம்மா (40) இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டிற்கு பலியானார். 24- 3- 80

வவுனியால் நேற்றுக்காலை இடம்பெற்ற நிலக்கண்ணிவெடியில் பொலிஸ் ஜீப் ஒன்று சிக்கி பலத்த சேதமடைந்தது. இதனையடுத்து பொலிசார் நடத்திய துப்பாக்கிப்பிரயோகத் தில் ஞானேஸ்வரி மகேஸ்வரி (ஏழு பிள்ளைகளின் தாய்) உட்பட 6பேர் கொல்லப்பட்டனர். 26- 3- 86

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணட வந்த பஸ்ஸில் பயணம் செய்த இருசகோதரங்கள் வவுனியாவில் வைத்து இராணுவத்தினரால் கைதானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அண்ணன் தங்கையாக இருவரும் புலோலிப் பகுதியை சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.
31- 3- 86

நேற்று முன் தினம் கோட்டையிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல்தாக்குதலால் திருமதி என். விக்னேஸ்வரனும் (37) அவரின் தாயாரான திருமதி ஞானசேகரனும் (58) காயமடைந்து யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். 7- 4- 86

கடந்த மாதம் கட்டைபறிச்சான் பகுதியைச் சுற்றிவளைத்து சோதனை நடத்திய படையினர் ஆறு குடும்பப் பெண்களை மானபங்கப்படுத்தியதாக திருமலை பிரஜைகள் குழுவுக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது. 21- 4- 86

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு மத்திய தந்திக் கந்தோரில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின்போது மரணமான சங்கானையைச் சேர்ந்த ரி. ரஞ்சனி (24) என்ற இளம் பெண்ணின் சடலம் கொழும்பு சவச்சாலையில் வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
10- 5- 86

பூண்டுலோயாவில் ஆசிரியையாகக் கடமையாற்றும் தனது மகளைப் பார்த்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த வயோதிப தமிழ்ப்பெண் கண்டியில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டு பின் சரீரப்பிணையில் விடப்பட்டுள்ளார். 16- 5- 86

படையினரின் 4நாள் தாக்குதலால் தீவுப்பகுதியில் சோவில்கள் வீடுகள் கட்டடங்கள் சேதம். இருவாலிபரும் பெண்மணியும் சுட்டுக் கொலை. கொலைசெய்யப்பட்டோர் வேலர் பாக்கியம் (65), மாசிலாமணி கருணைகரன், பண்ணியன் (இரத்தினசிங்கம்) 21- 5- 86

ஊர்காவற்றுறைப் பகுதியில் படையினர் மேற்கொண்ட அட்டகாசத்தின் போது இப்பகுதியைச் சேர்ந்த மல்லிகா செல்லத்துரை (16) என்ற இளம் பெண்ணின் ஒரு கையை படையினர் வெட்டித் துண்டித்தார்கள். இப்பகுதியில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் மரணமானவர்கள் சின்னகசேகாகிலன் (25), சவுரி (40), பெரியதம்பி (35) திருமதி. லூர்த்தம்மா (55), திருமதி கிளி (35). 25- 5- 86-

திருமலையில் ஒருபெண் உட்பட 3 தமிழ் அகதிகள் சுட்டுக்கொலை. மரணமான பெண் திருமதி. தர்மலிங்கம் (47) என்று அடையாளம் காணட்பட்டுள்ளார். 27- 5- 86

கோட்டையிலிருந்து ஷெல் அடி. கணவனும் மனைவியும் காயம். 29- 5- 86

சாவகச்சேரியில் இரு மர்மப் பெண்கள் நடமாட்டம். முகாம் தேடுவதாகத்தகவல். சாவகச்சேரியில் வேம்பிராய் என்ற கிராமத்தில் செல்வி என். சந்திரலதா என்ற பெண் தனிமையிலிருக்கும்போது பயங்கரவாதிகளின் முகாமைக் காட்டித்தரும்படி கேட்டு அவர் மறுத்ததால் அப்பெண்ணின் உடலில் பல இடங்களில் கத்தியால் வெட்டி ஒருவகையான பவுடரைப் பூசியபோது அவர் மயக்கமடைந்தாராம். தமிழர்களை அழிக்கப்போவதாக அம்மர்மப் பெண்கள் சொன்னார்களாம்.
31- 5- 86

கிளிநொச்சிப் பகுதியில் இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலுக்கு பூநகரி கிராமசேவையாளர் வேலாயுதம் ஸ்தலத்திலேயே மரணமானார். காயமடைந்து யாழ் அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளோர் விபரம். ஏ. சரோஜா (29) கிளிநொச்சி, ஏ. ரவிச்சந்திரன்

(16) கிளிநொச்சி, ஏ. புஸ்பராஜா (32) நெடுந்தீவு, சீதபொன்கலன் (45) கிளிநொச்சி.
6- 6- 86

வல்லவையில் தாக்குதல். பதினறுவயது இளம்பெண் மூளை சிதறி மரணமானர். கொலனியைச் சேர்ந்த 32 வயதுள்ள கர்ப்பிணியான ராசு பரமேஸ்வரிக்கு கையில் காயமேற்பட்டது.
8- 6- 86

வல்வெட்டித்துறை இராணுவமுகாம் பகுதியில் நேற்றுக்காலை நடைபெற்ற ஹெலிகப்டர் தாக்குதல்கள், மோட்டார்கள் கடற்பீரங்கித் தாக்குதல்களால் சிறுமி உட்பட மூன்று பெண்களும் ஏழு ஆண்களும் படுகாயங்களுக்குள்ளாகி பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்படடனர்.
11 6- 86

தொண்டமானறு முகாம்பகுதியில் ராணுவம் சுட்டு சிறுமி பலி. மேலும் பலருக்குக் காயம். குழந்தையின் தாயாரான க. இ ர ா ச கு ம ா ரி (23) யும் அயல்விட்டிலிருந்த பேத்தியான திருமதி சிசிலியா (61) வும் படுகாயத்திற்குள்ளாகி தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்றும் சுஜீவன் (12), சே. ஞானரஞ்சிதம் (43) என். சியாமளா (61) ஆகியோரும் துப்பாக்கிவேட்டுக்களாலான காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
17- 6- 86

ஏழாலைவடக்கு, கட்டுவன், வறுத்தலைவிளான் பகுதிகளில் நேற்று முற்பகல் 8.30 மணி தொடக்கம் 8 45 மணிவரை இடம்பெற்ற ஹெலிகொப்டர் சூட்டுச் சம்பவத்திற்குள்ளாகி சிகிச்சை பெறுகிறர். நாகன் சீதேவி (65) மயக்கமுற்று மரணமானர்.
18- 6- 86

மண்டைதீவுச் சம்பவங்களில் ஒன்று. நிறைமாதக் கர்ப்பிணியும் ஓடினர். குழந்தை பிறந்தது.
18- 6- 86

வல்வை இராணுவ முகாமிலிருநது சுமார்300யார் தொலைவில் வீட்டுக் கிணற்றுள் குளித்துக் கொண்டிருந்த வயோதிப மாது துரைச்சாமி அன்னலட்சுமி(57) இராணுவத்தின் துவக்குச் சூட்டுக்கு இலக்காகி ஆபத்தான நிலைமையில் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
18- 6- 86

## ஈழநாட்டிலிருந்து:-

யாழ் கோட்டையிலிருந்து பரவலாக பத்துமணி நேரம் நடந்த 'ஷெல்' தாக்குதல் துப்பாக்கிச் சூட்டில் 5 பெண்களும் காயமடைந்தனர்.

ஊர்காவற்றுறையிலிருந்து நேற்றுக்காலை யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ் ஒன்று கோட்டைக்கு சமீபத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதில் பெண் பிரயாணி ஒருவர் காயமடைந்தார்.
7- 4- 1986

ஏறுவூர் பொலிஸ் பிரிவிலுள்ள தளவாய, பன்குடாவெளி, ஆயித்தியமலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 25க்கு மேற்பட்ட பெண்கள், தீவிரவாதிகளுக்கு உணவு சமைத்துக் கொடுத்ததாகவும் மற்றும் உதவி ஒத்தாசைகள் புரிந்தனரென்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூதூர் கடற்கரை சேனையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் 29வயதுடைய இரு பிள்ளைகளின் தாய் ஒருவர் இராணுவத்தினரால் மானபங்கப்படுத்தப்பட்டுள்ளார்.
11- 4- 1986

புத்தாண்டு தினத்தில் பலாலி விமானப் பகுதியை அடுத்துள்ள தையிட்டி, மயிலிட்டி கட்டுவன் பகுதிகளில் நடைபெற்ற ஹெலிகொப்டர் தாக்குதலில் மயிலிட்டியைச் சேர்ந்த திருநாவுக்கரசு இந்திரை (17 வயது) கதிராசிப்பிள்ளை (70வயது) பெண்கள் காயத்திற்குள்ளானார்கள். 16- 4- 86

யாழ்நகரில் ஆயுதப்படையினருக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் இரண்டு பெண்கள் காயமுற்றனர். 1- 5- 86

வசாவிளான் ம. வி. விடுதிமாணவிகள் விடுதி மேற்பார்வையாளரான பெண் உட்பட 12பேரை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர். 8- 5- 86

யாழ்நகரில் இடம்பெற்ற விமானக்குண்டுவீச்சு ஷெல், துப்பாக்கித் தாக்குதல்களில் இருவர் கொலை செய்யப்பட்டும் 54பேர் காயமடைந்துமுள்ளனர். அதில் யாழ் ரயில் நிலையத்திற்கு சமீபத்தில் விழுந்த ஷெல் தாக்குதலில் பெண்கள் உட்பட 9பேர் காயமடைந்தனர் யாழ் பருத்தித்துறை வீதி இரண்டாவது ஒழுங்கையில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் பெண்கள் உட்பட 8பேர் காயமடைந்தனர். 20- 5- 86

ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலிலும் துப்பாக்கிச் சூட்டிலும் இரு பெண்கள் உட்பட 7பேர் காயமடைந்துள்ளனர். பேரின்பநாயகி (14 வயது), மல்லிகாமலர் (45 வயது) ஆகியோரில் பேரின்பநாயகிக்கு கரம் ஒன்று அகற்றப்பட்டுள்ளது.
21- 5- 86

மண்டைதீவு அல்லைப்பிட்டிப் பகுதியில் ஆயுதப்படையினர் ஹெலிகொப்டரிலிருந்து நடத்திய துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் ஒரு வயோதிபமாது உட்பட நால்வர் பலியானார்கள் தேனீர்கடை வைத்திருக்கும் திருமதி வேலாயுதம் பாக்கியம் (வயது 62) என்பவரே,
21- 5- 86

வல்வெட்டித்துறை பகுதியை நோக்கி பீரங்கிப் படகுகளில் இருந்து குண்டுகள் ஏவப்பட்டன. இதில் ஜராங்கனி (30 வயது) என்பவர் காயமடைந்தார். 21- 5- 66

வடக்கில் விமானக் குண்டுத் தாக்குதலில் செம்பியன் பற்றில் 7பேர் பலி. அதில் ஆறுமுகம் லோகவாணி (வயது 5) ஆறுமுகம் பிலிப்தா (வயது 11) தவமணி (வயது 32 ஆகிய பெண்களே மரணமானவர்கள். காயமடைந்தவர்களுள் செல்வி ரீற்ரு (வயது 6 சுமித்திரா (வயது 13) கொலஸ்ரியா (52) தேவராணி (வயது 32) 23- 5- 86

திருகோணமலையிலுள்ள தம்பலகாமம் பகுதியில் இடம் (85) வன்முறை சம்பவத்தில் அகதிகளாக்கப்பட்டு கிண்ணியா அகதிமுகாமில் இருந்து தங்கள் வீட்டைப் பார்க்கச் சென்ற 9 பிள்ளைகளின் தாயான திருமதி தர்மலிங்கம் (வயது 45) என்பவரும் அவருடன் சென்ற இரு வாலிபர்களும் ஆயுதப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். 28- 5- 86

நேற்று முன் தினம் காலை வல்வெட்டித்துறை முகாமிலிருந்து திடீரென ஏவப்பட்ட 'ஷெல்' வல்வை அம்மன் கோவிலடியில் வீட்டிலிருந்து ஒரு பெண்ணையும் தாக்கியது.
1- 6- 86

நேற்றுகாலை யாழ் கோட்டையிலிருந்து யாழ் பிரதான வீதியை நோக்கி வந்த துப்பாக்கிச் சூட்டுக்கு சுழிபுரத்தைச் சேர்ந்த இரத்தினம் புஸ்பம் செல்வி என்ற யுவதி இலக்காகி காயமடைந்தார். 3- 6- 86

திருகோணமலை மாவட்டத்திலுள்ள உப்புவெளி ஆயுர்வேத சிகிச்சை நிலையத்தில் ஆயுதப்படையின் மேற் கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஒரு சிறுமி உட்பட இரு பெண்கள் பலியானார்கள். 4- 6- 86

உப்புவெளி சூட்டுச் சம்பவத்தில் பலியான திருமதி கனகரத்தினம் நவமலர்(28வயது) சிறீ சாந்தகுமாரி (26வயது) ஆகிய இரு பெண்களும் மானபங்கப் படுத்தப்பட்ட பின்னரே கொல்லப்பட்டதாக மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 5- 6- 86

கிளிநொச்சியில் நடந்த தாக்குதலில் பல பெண்களும் கொல்லப்பட்டுள்ளனர் 8- 6- 86

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் தாயை அணைத்திருந்த நான்கு பாலகர்கள் ஷெல் தாக்குதலுக்கு பலியானார்கள். தாய் காயமடைந்தார். 9- 6- 86

வல்வையில் நடந்த ஷெல் பீரங்கித் தாக்குதலில் பொலிகண்டியைச் சேர்ந்த அல்பிறட் மரியரூஸ்(24வயது)மேரிதெரேசா(19வயது) ஆகிய இருபெண்களும் காயமடைந்தனர். 11- 6- 86

வல்வெட்டித்துறையில் நடந்த கடும் தாக்குதலின் போது பல பெண்களும் காயமுற்றனர். 12- 6- 86

இராணுவம் சுட்டு 3வயது சிறுமி தலைசிதறி மரணம். மயிலிட்டி மாதா கோவிலுக்கருகில் நேற்றுக்காலை 9மணியளவில் இச்சம்பவம் நடந்தது. 17- 6- 86

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் ஷெல் தாக்குதல் தொடங்கியதும் மக்கள் ஓடி ஒளித்துக் கொண்டனர். ஒளித்திருந்த போது ஷெல் விழுந்ததால் தயாநிதி (17வயது) பலியானார். 23: 6- 86

காரைநகர் - ஊர்காவற்றுறை கடற் பிராந்தியத்திலிருந்து கடற்படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலுக்கு 22வயது யுவதி ஒருவர் இலக்காகி காயமுற்றார். 30- 6- 86

## உதயனிலிருந்து:-

துணுக்காய்ப் பகுதியில் தேடுதல் நடத்த வந்த சீருடையினர் ஒரு பெண்ணை மானபங்கப்படுத்த முயன்றபோது அவர்களிடமிருந்து விடுபட்டு ஓடிச்சென்ற அப்பெண் கிணற்றுக் கட்டு ஒன்றில் ஏறிநின்று என்னை நெருங்காதீர்கள், நெருங்கினால் கிணற்றுக்குள் விழுந்து விடுவேன் இல்லாவிட்டால் என்னைச் சுட்டுவிடுங்கள். என்று சத்தமிட்டார். இதனால் அதிர்ச்சி அடைந்த சீருடையினர் தாம் வந்த வழியே திரும்பிச் சென்றனர். வேறொருபெண் கற்பழிக்கப்பட்டு பின்னர் தற்கொலை செய்துகொண்டாள். 13- 3- 86

பொம்பர் விமானங்கள் குண்டு பொழிய விரல்கள் சிதறிய நிலையில் உயிர்தப்பி வந்த பெண்கள். 8- 6- 86



இந்த கள்ளமற்ற சிரிப்பும
கவலையே தெரியாத தன்மையும் நீடிக்கட்டும்.

இவர்களிடம் போராட்டத்தை
கையளிப்பது வேண்டவே வேண்டாம்.

எதிர்காலத்தை வளமாக்க வேண்டியவர்கள்
இவர்கள்.

சிரித்துக் கொண்டு வளமாக்கட்டும்.
அழுவது இவர்களுக்கு வேண்டாம்.

